ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௨௧ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, ஐப்பசி நவம்பர், 1954. | பரல் ௫ |
|---|---|---|

## பிரஞ்சு இந்தியா விடுதலை

உலகில் யாவரும் தன்னுரிமையுடன் வாழ்வதே வாழ்வாகும். அஃதின்றி வாழ்வது, கூட்டில் அடைபட்டு வாழும் கிளியின் வாழ்வை ஒப்பதேயாகும். கூட்டில் பூட்டப் பெற்றிருக்கும் கிளிக்குப் பறக்க இயலாது; அதன் இறக்கைகள் அரியப் பெற்றிருக்கும்; அது, வாழும் கூடு, கதவு கொண்டு மூடி, இணைத்துவைத்திருக்கும். எனவே, அது தன்னந்தனியாகத் துன்பத்துடன் வாழும்.

இவ் வாழ்வை ஒப்பதே, ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு அடிமைப்பட்டு வாழ்வது. இவ்வாறு அடிமைப்பட்டுக்கிடந்ததே நம் இந்திய நாடு. அஃது ஆங்கிலேயர் பிடிப்பினின்றும் 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் விடுதலை பெற்றது. அதன் ஒரு பகுதிக் குட்பட்ட பிரஞ்சிந்தியாவான புதுச்சேரி முதலியன, பிரஞ்சினரின் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தமையால்-அது, வேறொரு அரசினரின் கைக்குள் சிக்கியுள்ளமையால்—இந்தியா விடுதலை பெற்றகாலை, விடுதி பெறவில்லை. இது காலை அந்நாட்டில் விழிப்புற்ற மக்களின் கிளர்ச்சியால் அற முறையில் ஏற்கெனவே 1948-இல் சந்திரநாகூர் இந்தியாவுடன் இணைய முடிபு செய்தது உலகில் யாவரும் நன்கறிந்ததே.

அப்பால் புதுச்சேரியில் வாழும் மக்களின் உரிமை வேட்கை மிகுதியினால் அடுத்தடுத்து விடுதலைக் கிளர்ச்சி வீறிட்டெழுந்தது. பிரஞ்சு அரசியலார் அடக்குமுறையைக் கையாண்டனர்; மிரட்டினர்; வெருட்டினர்; அடித்தனர்; வேறு பல அரசியல் சூழ்ச்சி முறைகளையெல்லாம் செய்தனர்; அவையெல்

லாம் விடுதலைவேட்கை ஞாயிற்றின் முன், பனிப்படலமென நிலையாதாயிற்று.

பின்னர்ப் பிரஞ்சு ஆட்சியாளர், இந்திய அரசியலாரொடு நட்புமுறையில் பிரஞ்சிந்தியாவை விட்டுக்கொடுத்துவிட்டுச் செல்லலே நலனென உணர்ந்தனர். அதன் பிறகு, 1954-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் உக-ஆம் நாள், இந்தியா, பிரஞ்சு அரசினர்களிடையே தில்லி மாநகரில் ஒப்பந்தம் ஆயிற்று. அப்பால், இந்தியக் குடியரசுப் பிரதிநிதி, திரு. கேவல்சிங்கினிடம் பிரஞ்சுக் குடியரசு அரசியல் தூதர், திரு. பியரிலாண்டி 1954-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் க-ஆம் நாள், காலை 6-45 மணிக்கு மாற்றிக்கொடுத்து அவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அன்றுமுதல் பிரஞ்சிந்தியா விடுதலை பெற்று நம் இந்தியக் குடியரசுடன் இணைந்து திகழ்கின்றது.

இவ்விடுதலை பெருமகிழ்ச்சிக்குரிய வொன்றாகும். இப் பிரஞ்சிந்தியாவை முதன்முதலில் கைப்பற்ற அடிகோலியவர் பிரான்சிஸ் மார்டின் என்பவராவர். அவர் 1674-ஆம் ஆண்டில் ஆங்குப் பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிச் சார்பில் ஒரு பொறியியல் (Factory) தொழிற்சாலையை நிறுவி நடத்தி வந்தார். அதன் பின் உயர்நிலை பெற்று முன்னேறிவந்த பிரஞ்சிந்தியாவின் தலைநகரான புதுச்சேரியை டச்சுக்காரர்கள் 1693-ஆம் ஆண்டு கைப்பற்றினர். அவர்களிடமிருந்து பிரஞ்சுக்காரர்கள் 1699-ல் அதனை மீட்டனர் அப்பால் பன்முறை பிரிட்டானியர் முற்றுகைக்கு ஆளாயினர். அதன் பின்னர் இறுதியாக 1814-ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கைமூலம், பிரஞ்சுக்காரருக்கு இப் புதுச்சேரி முதலிய ஊர்கள் உரிமையாயின.

இப் புதுச்சேரியோடு காரைக்கால், மாகி, ஏனாம் முதலிய நகரங்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரஞ்சினர்க்கு உரிமையாயின. நூற்றைம்பது ஆண்டுகட்கு மேல் அடிமைப்பட்டுக் கிடந்த இப் பிரஞ்சிந்தியா, இவ் 1954-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் க-ஆம் நாளன்று இந்தியக் குடியரசுடன் இணைப்புற்றது; இணைப்புற்றவுடன் புதுச்சேரி நகரம் எல்லையில்லாததோர் இன்புற்றது ; அஃதடைந்த மகிழ்ச்சிக்கு,

> 'கார்பெற்ற தோகையோ ; கண்பெற்ற வாள்முகமோ;
> நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ ?'

எதை ஒப்புரைப்பது? எல்லா நாட்டின் உரிமை மகிழ்வெல்லாம் ஒன்று கூடி இப் புதுவை நகரில் திரண்டுருவானது போன்று காட்சியளித்தது.

ஆனால், ஈண்டு இந்நிலையில் ஓர் துயர்தரும் செய்தியையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நவம்பர் ௧-ம் நாள் பிரஞ்சிந்திய விடுதலை நாளாக அமைய இருக்கையில், அதற்கு முந்திய நாள் 31-10-54-இல் பிரஞ்சிந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவரும் விடுதலை வேட்கை மிக்குடையாரும், பிரஞ்சு இந்திய மக்கட்சபைத் தலைவருமான திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எதிர்பாராவண்ணம் மார்படைப்பினால் உயிர் நீத்தார்கள். பிரஞ்சுஇந்தியா விடுதலைப்பெறப் போகிறது என்ற செய்தியால் அவர் உள்ளம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தால் தாக்கப்பட்டதுபோலும். அவர் பிரிவு புதுவை நகரைத் துயரத்தில் ஆழ்த்திற்று. நாமும் அவரின் எதிர்பாராத பிரிவுக்கு மிக வருந்துகின்றோம்.

அரசியல் உரிமையேற்க முதன்மையாளர் திரு. கேவல்சிங் அரசினர் அத்தாணி மன்ற மாளிகைக்குப் புதுவைத் தெருவின் வழியாக உந்தூர்தி (Car)யில் சென்றார்; அப்போது ஆயிரக் கணக்கான மக்கள் குழுமினர்; மிக்க மகிழ்ச்சி ஆர்ப்புச் செய்தனர்; அரசியல் மாளிகையில் படை அணிவகுப்பு நிகழ்ந்தது; திரு. கேவல்சிங்கும், அவர் மனைவியாரும் அதனைப் பார்வையிட்டுக் களித்தனர். பிரஞ்சு அரசினரிடமிருந்து, ஆட்சி முறையை மாற்றியவுடன் அரசினர் மாளிகையில் நம் இந்தியக் கொடி ஏற்றிப் பறந்தது, திகழ்ந்தது; பீரங்கி முழக்கம் மிக்கது; முதனாள் மாலையிலேயே பிரஞ்சுக் கொடிகள் கீழிறக்கப் பெற்றன. முதனாள் நள்ளிரவுக்குப் பின் இந்தியக் காவற்படைகள் பிரஞ்சிந்திய ஆட்சி நகர்கட்குட் சென்று போலிஸ் நிலையங்களைத் தன்னுரிமையாக்கிக்கொண்டன. திரு. பாலகிருட்டின மேனன் புது போலிஸ் இன்ஸ்பெக்டர் செனரலாகப் பதவி ஏற்றார்.

இன்று பிரஞ்சு இந்தியா என்ற பெயர் மாறி, இந்தியப் புதுவை, காரை, மாகி, ஏனாம் நகரங்களாயின. நாடெங்கும், நகரெங்கும், ஊரெங்கும் உலகெங்கும் மகிழ்வு! மகிழ்வு! பெரு மகிழ்வு! யாமும் உளமுவந்து புது மகிழ்வு கொள்கின்றோம்!

ஆனால், புதுவை, காரைக்கால் முதலிய நகரங்களானவை, தமிழ் நாட்டோடு இணைந்த தமிழ்வழங்கு தேயமேயாம்; மொழி பெயர் தேயமன்று; முற்காலத்தும் தற்காலத்தும் பேரறிஞர் பலர் வாழ்தற்கு இடனாகத் தவஞ் செய்வார்க்கும் அஃதிடம்; பொருள் செய்வார்க்கும் அஃதிடமெனத்திகழ்ந்த பெருமை பெற்றவை. காலக் கோட்பாட்டினால் வழி குழியாகிக் குழி வழியாகி மாறி மாறி வருவது போல, இவைகளும் மாறலாயின;

இன்று எம் இந்திய நாட்டோடு இணைவதாயின. ஆயினும், இது முழு விடுதலையென்று கூறற்கில்லை.

எம் சென்னை மண்டிலப் பகுதிகளும், தமிழ்கூறு நாடு நகரங்கள் யாவும் சிற்றூர்களும் இன்னும் தன்னுரிமை பெற வில்லை; முன்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தன. இதுகாலை வடவர் ஆளுகைக்குக் கீழே அடங்கவேண்டுவ தாயிற்று. அரசியல் மன்றங்களில், சட்ட அவைகளில், வழக் குரை மன்றங்களில், அஞ்சல் நிலையங்களில், புகைத்தொடர் நிலை யங்களில், பிறவேறு அலுவலகங்களிலெல்லாம் இந்தி மொழியே தலைமை பெற்றுள்ளது. எம் கன்னித் தமிழ்மொழி கீழேயே கிடக்கின்றது. நம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக அமைந்து உயர்ந்து நாடு நகரங்களிலெல்லாம் மூலைமுடுக்குகளிலெல்லாம் தமிழ்மொழி வழங்குதல் வேண்டும் ; எங்கும் செந்திறத்த தமி ழோசை கேட்கப்பெறல் வேண்டும் ; வேற்றுமொழிகள் என்றும் எக்காலத்தும் தலைமையேற்காத உள்ள உரத்தை நம் தமிழர்கள் மாறாது கொள்ளல் வேண்டும் : அன்றே 'விடுதலை விடுதலை ! பரவரொடு மறவருக்கும் குறவருக்கும் விடுதலை ! விடுதலை ! விடுதலை !" என்று முழக்கஞ் செய்த தேசீய வீரன் பாரதியின் கனவு, நனவாக மாற்றம் பெறும். அம் மாற்றமாகிய முழு விடுதலை பெற்று,

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்'

ஓங்கி ஒளிரும் நாளே நன்னாள் ; பொன்னாள் ! இந்நாள் எந்நாள் வருமோ என ஏக்கற்று நிற்கின்றோம் ! அன்று எம் தமிழகக் கொடிகளான, மீன், புலி, வில் உருவங்கள் பொறித்த கொடிகள் ஒன்றாக இணைந்து, நந்தமிழகம் மொழி, கலை, பண்பு, அன்பு, நண்பு முதலிய யாவும் நலனுறப் பெற்று ஒளிருமென அந் நாளை எதிர் நோக்குகின்றோம். விரைந்து நந் தமிழகம் விடுதலை பெற்று உயர்வுறுதலைக் கண்டு மகிழ்வோம் ! மகிழ்வோம் !

வாழ்க தமிழகம் ! மலர்க விடுதலை !

# மறப்பெண் மங்கையர்க்கரசி

[புலவர், திரு. க. குமரன்]

நங்கையர் மன்னி: அங்கயற் கண்ணி! வருக! வருக! வணக்கம். நின்வரவு நல்வரவாகுக.

அங்கயற் கண்ணி: நன்று; நின்வாழ்த்து! மகிழ்ச்சிக்குரியதே! வா! நாம் பூங்காவுக்குச் சென்று இம்மாலைப் பொழுதைக் கழித்து மகிழ்வோம்.

நங்கையர் மன்னியும் அங்கயற் கண்ணியும் பூங்கா சென்று உலாவுகின்றனர். வானொலி இவர்களின் இன்பத்துணையாக இசை வழங்கியது. சில விளையாடல்களும் புரிந்தனர். ஆடி மகிழ்ந்து சிறிது களைப்பாறுகின்றனர். அவ்வமயம் நங்கையர் மன்னிக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது; அதுநீண்ட நாள் ஐயம்! கேட்கவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த உள்ளம், துள்ளிக் குதிக்க, "கயற்கண்ணி! இப்பூங்காவிற்கு 'மங்கையர்க்கரசி பூங்கா' என்று ஏன் பெயர் வந்தது? இங்கு ஒரு சமாதி காணப்படுகிறதே, அதற்கு'வெள்ளி'தோறும் ஊரார் வந்து வணங்கிச் செல்லச் சரியான காரணம் உனக்குத் தெரியுமா? அன்பு கூர்ந்து எனக்கு அருளுக!" என்று வேண்டினள்.

கயற்கண்ணி கூறலுற்றாள்: "நங்காய்! மானமே பெரிதென்று வாழ்ந்த மறத்தமிழ் நாட்டில்—நாணமே நங்கையர் அணிந்து, கற்பே காரிகையாகிய கன்னியர் வாழ்ந்த தமிழ் நாட்டில், கடமை உணர்ச்சி தவறாமல் கற்றுத் தேர்ந்து, 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே—சான்றோனாக்குதல் தந்தைக் குக் கடனே—வேல் வடித்துக் கொடுத்தல் வேந்தர்க்குக் கடனே—களம் சென்று, களிறுபலகொன்று, வெற்றிமாலைசூடி, வாகைப்பரணி பாடி, ஈன்றாரையும் எழில்மனையாளையும் கண்டு மகிழ்தல் மைந்தர்க்குக் கடனே' என்று, கடப்பாட்டுப் பண் பாடிச் சாகாவரம் பெற்ற 'பொன்முடியார்' வாழ்ந்த தமிழ் நாட்டில்—அவர்களின் வழியில்—அவர்கள் மறம்பாடி மறத்தியாய் வாழ ஆசைப்படும் மங்கையர் மணியே! நங்கையர் நாயகமே! கூறுகிறேன்; கேள்:

பழங்காலத்தில்—பகுத்தறிவு, பால்குடிக்கும் பாலகர்க்கும் பக்கத்துணையாயிருந்த காலத்தில்—சேர, சோழ, பாண்டியர்கள் செந்தமிழ்ச் சங்கம் வைத்துத் தங்கள் பெருமையை, மங்

காத மறையாக்கிக் கொண்ட நாட்களில், இந்தப் பாண்டியநாட்டில்—நம்மூராகிய இந்த நல்லூரில்—நக்கண்ணை என்பாள்—நங்கையர் நாயகமாய் வாழ்ந்து வந்தாள். அவள், இயற்கையாகப் பெண்கள்குலத்திற்குப் பிடித்திருக்கும் அச்சப் பேயை—கோழைப் பூதத்தை—பேதைமைப் பிசாசை இருக்குமிடம் தெரியாமல் ஓட்டி வாழ்ந்து, கடமை மாறாத கற்புக்கடம் பூண்டு, காதல் அன்பு மீதூர, தாயன்பு தவழ வாழ்ந்த, நன்மனம் படைத்த நங்கை யாவள்.

அவள், பிறந்து, வளர்ந்து, தமிழ்பேசி, 'திருக்குறளை' வாயாலிசைத்தபோது வயது மூன்று. மூன்றும் வயதில் அவள் முழக்கிய திருக்குறள், 'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால், அம்மா! அரிவை முயக்கு' என்பதாம். இக்குறளை அவளாசிரியர், எப்படியோ முயன்று, முற்றுமழலையும்—நற்றேன் சுதலையும் கலந்து, கோவை அறாது நாவை அசைத்து, நற்குரலில் திருக்குறள் முழக்கம் செய்யச் செய்திருக்கிறார்! அவள் அவ்வாறுகூறி, அடுத்து வாய்திறந்ததால்,

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றியான்' என்பது ஒலித்ததாம். இவ்வரிய கருத்துக்களை அக்குழந்தைப் பருவத்தில் ஒருகுழவி கூறுமானால் யாருக்குத்தான் வியப்பு வாராது! அம்மா!

'தம்முடைய சொந்த முயற்சியில் கட்டப்பட்ட வீட்டில் இருந்துகொண்டு, தாமே சம்பாதித்த பொருள்களை, உற்றார், உறவினர், அற்றார், அறிஞர்' யாவர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தாம் உண்பதிலே தோன்றுமாம் பெரிய மகிழ்ச்சி!—பெரிய இன்பம்—பெரிய உவகை—இல்லறம் பெற்றபயன்!' 'பிச்சையெடுத்துத்தான் உயிர் வைத்திருக்க வேண்டும் என்று வாழ்க்கை அமையுமானால் இப்பேருலகம் படைத்த கடவுளுந்தான் அழிந்து போகட்டுமே!' என்று, இப்படி விலைகொடுத்து வாங்க முடியாத கருத்து மணிகளைக் குழந்தை கொட்டிற்று.

கண்டாரும் கேட்டாரும் கொண்ட மகிழ்ச்சியால் 'மங்கையர்க்கரசி! மங்கையர்க்கரசி!' என்றே வாயாரக் கூறி வழங்கினர்.

அவள் வளர்ந்து, 'எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற பழுத்த இலக்கணக் கடல்களையும் தமிழிலக்கியங்களையும் கடந்து, திருக்குறளின் 'இன்பத்துப் பாலை'க் கற்கும் இளமையின் எழுச்சியைப் பெற்றாள்.

அவளுக்கு அழகுதங்கி ஆனந்தமடையும் அந்நாட்களில், அழகு சுவைக்கும் ஓர் ஆடவன்—அவன் பெயர், ஆடவர்க்கரசன்—ஆம்—அவனால் காதலிக்கப் பெற்றாள்.

காதலிக்கப் பெற்ற காலத்தே திருக்குறள் காதல்நெறி யாகிய,

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில'

என்ற, கள்ளங்கபடத்தை வெளிப்படுத்தும் உரையாடலில்லாமல், காதலின் முழு ஆழத்தையும் காட்டி யளக்கும் அளவு கோலாகிய கண்ணால் கண்டு காதலித்து, பெற்றோர், மற்றோர் யாவரும் கூடித் திருமணம் செய்து, ஒருமன வாழ்க்கையில் ஈடு படுத்தி, வாழ்க்கை யுலகைக் 'காண்' எனக் காட்டினர். அங்கு அவள் எத்தனையோ கொடிய காட்சிகளைக் கண்டாள்; நல்லன பேசி, நல்லனவே செய்து காலங் கழித்த இளமைப்பருவக் காட்சி அங்கு இல்லை; ஒருபக்கம் கொடுமை—ஒருபக்கம் வறுமை—ஒருபக்கம் வஞ்சகம்—ஒருபக்கம் ஏமாற்றல்—ஒரு பக்கம் போலிவேதாந்தம்—ஒருபக்கங் கூடாவொழுக்கம்! இப் படித் தோன்றிய வாழ்க்கையின் இடையிலே 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப், பண்பும் பயனுமது' என்ற, அன்பு நெறியிலும், அறநெறியிலும் வழுவாது—ஒழுக்கத்தால் விழுப்பம் எய்தி—இல்வாழ்க்கைப் பண்பையும்—இல்லறம் பெற்ற பயனையும் பெற்று,

'உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்'

என்ற, தேவர் காட்டும் தீந்தமிழ்ப் புலவியை மேற்கொண்டு வாழ்ந்து வரும் நாளில் 'பிள்ளைக்கனி' பெற்றாள். பெருமாட்டி ஆனாள்.

அக்காலம் வடவர், தென்னவர்மீது படையெடுத்துவந்து, தமிழகத்து ஆண்மை முடியாகும் பாண்டிய நாட்டின்மீது முற் றுகையிட்டனர். வீரஞ் செறிந்த தமிழ்நாட்டு மறவர்கள் கொதித்தெழுந்தனர். நம் மங்கையர்க்கரசியும், 'பெற்ற தாயி னும் பிறந்த பொன்னாட்டை மீட்கப்போவதே தமிழ்த்தொண்டு —தமிழ் வீரம்' என்று சிங்கத்தின் சீற்றங் கொண்டாள்.

மறக்குடி மக்களைப் பார்த்து மங்கையர்க்கரசி கூறுகிறாள்: "அறிவும் ஆற்றலும் நிறைந்த அப்பா! வீரத்தை இருதோள்களி லும் வாழவைத்து, வாகைக் கொடியுடன் என்னுடன் பிறந் தோரே! இமயமே திரண்டு எழுந்து வந்தாலும் இடித்துக் கயல் பொறிக்கும் உக்கிர பாண்டியன் வழிவந்த—உலையா உள்ளம் படைத்த—ஊக்கம் மிகப்பெற்ற—உரம் என்னும் திறம் பெற்ற உள்ளங்கவர்ந்து—கொள்ளை யின்பம் கொடுக்கும்—பொதியமே மார்பாக வமைந்த மணாளரே! உங்கள் வாளுக்கும் வேலுக்கும்

வாளிக்கும் வேலை! உங்கள் வீரத்திற்குச் செந்தமிழ் இலக்கியம் பாட—மாற்றார் வாட—தோள்வலி காட்ட—வாள்வலியோங்க-கைத்திறங்கள் காட்டத்தக்கதோர் வாய்ப்பு! தளராதீர்; உள்ளங் குலையாதீர்; பெண்டு பிள்ளைகளை நினையாதீர்; உற்றவர் நலத்தினும் ஊரார் நலமே பெரிதெனச் செல்லுங்கள்! வெற்றி கொள்ளுங்கள்!" என்று, திக்கெட்டும் படைவீரர் திரள முழக்கினாள். வீடுகளே திரண்டுவிட்டன; சென்றன.

செல்லும் தந்தையும் தமையன்மார்களும் வாயிலில் நிற்க, 'ஆடவர்க்கரசன் என்னுடை அடிகளை வாழ்த்தி, முடியும்வரையில் விருந்தினர்க்கு ஓம்பலாம்' என்று இல்லறச் செல்வம் பெற்ற செல்வமே! சிந்தையில் தங்கும் சீர்மறமங்காய்! சென்று வருகிறேன். உன் அன்பு என்னுடனே வந்து துணைசெய்யட்டும்' என்று கூறித், தன் முகத்துவழியும் அன்புநீரை அவள் முகந் தெளித்துமறவிடை பெற்றுச்சென்றனன்—அறப்போர் செய்தனன்.

போர்க்களத்தில் தந்தை இறந்துவிட்டார்; அவருக்குக் கல் நாட்டிவிட்டார்கள் என்ற செய்தி முதலில் வந்தது; சிந்தை நொந்தாள்; கணவனும் தமையன்மார்களும் களத்துள்ளார்கள் என்று மகிழ்ந்தாள்; போர்ச் சிரிப்புச் சிரித்தாள்!

கணவன் இறந்துவிட்டான் என்று அடுத்துக் கேட்டாள்; கொதித்தெழுந்தாள்; களம் சென்றாள்; அகப்புண்பட்டு இறந்த அடலேற்றைக் கண்டாள்; சிரித்த முகத்தைக்கண்டு சிரித்தாள். அவ்வாணழகனை எவ்வேல் கொன்றதோ அவ்வேலை மட்டும் தானெடுத்துக் கொண்டாள். போர்க்களத்தில் ஒப்பாரி இட வேண்டிய நேரத்தில் உள்ளம் பூரித்தாள்; தன் தமையன்மார்கள் உள்ளனர் அவர்கள் வெல்வார்களென்று! வீடு திரும்பினாள்.

திரும்பின அப்போதே, தமையன்மார்களும் இறந்துபட்டனர் என்ற செய்தி கேட்டாள்; பீதி கொண்டாளில்லை; தன் கையகம் கண்டாள். யாரை? மறக்குலக் கொழுந்தை—திறம் பலபுரி செல்வனை—பால்குடிக்கும் படை மறவனை! அவனைத் தன் முலைபறித்து—தன் கணவனுடைய மறம்பாடும் வேல்வடித்துக் கொடுத்து—முன்னோரின் வீரக்கல் காட்டி, 'செல்க போர்க்களம்' என்றாள்.

சென்றானம் மறவன் மைந்தன்! குழந்தை! பாவம்! போரில் மாண்டது!

பின் என்ன செய்வாள்?

'ஓ! வீட்டில் இருக்கிறது; என் வீரன்—என் கண்ணாளன் அகப்புண்பட்ட அடலேறு—அவனைக் கொன்ற அவ்வேல்!'

ஓடோடிக் கொணர்ந்தாள் !

'தமிழ்நாடே ! உன் புகழ் நின்றோங்க என்குடி, மறம்பாடி மண்ணுலகம் நீத்தது ! தமிழன்னாய் ! நின்புகழ் நின்றோங்க என்குடி, கற்புக் கடம்பூண்டு, காதல் வாழ்வைக் கல்வெட்டாக்கிக் காலம் முடித்தது. என் நாட்டவர் வெல்க! எம்பகைவர் வீழ்க ! என்னுடைய கடைசித் துளிக் குருதியும் என் நாட்டைக் காப்பதாகுக ! என்று சூளுரைத்து, கணவனை மாய்த்த வேல்—காதற்கொலை வேல் எதுவோ, அதனைக்கொண்டே ஆவி போக்கினாள்.

வாழி மங்கையர்க்கரசி ! வாழி ! வாழி ! அவள் குறிக்கோளை இந்நாட்டுப் பெண்கள் மேற்கொள்ள இப் பூங்கா உண்டாக்கப்பட்டது. அவள் புகழ்பாடி—அவள் தாள் வணங்கி—அவளாற்றல் பெற—அவள் சமாதிக்கு ஊரார் அனைவரும் வணங்குகிறார்கள்; வாயாரத் துதிக்கிறார்கள் ; புகழ் பாடுகிறார்கள். அறிந்தனையோ அறிவுத் தெய்வமே ! அங்கையற்கண்ணியே ! இவள் வாழ்க்கையைத்தான் இலக்கியம் பாடுவதைக் கேள் :

'கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பி—செல்லுந்தம்
இற்செல்வ மன்றி யிரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம் பூவாப் புகழ்'

(இல்லாண்முல்லை: பு. வெ. மாலை பொதுவியல்: ௫)

'கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்—பின்னின்று
கைபோய்க் கணைபுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் னேறு'.

(ஏறாண்முல்லை: பு. வெ. மா. வாகை: ௨௨)

'வந்தபடை நோனாள் வாயின் முலைபறித்து
வெந்திற லெஃக மிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு'

(மூதின்முல்லை: பு. வெ. மா. வாகை: ௨௧.)

'கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்—அவ்வேலை
அம்பிற் பிறழும் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று.

(ஆஞ்சிக்காஞ்சி: பு. வெ. மா. காஞ்சி: ௨௲)

**வாழி தமிழரின் மறப்போர் வென்றி !**

# மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(செல்வி, சிலம்பு : உக, பரல்-உ. பக்கம் எஉ-இன், தொடர்ச்சி)

வீரசோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனார் தமது உரையில் இந் நூலைக் குறிப்பிடுகிறார். வச்சத்திளங்கோ என்னும் சிற்றரசன்மீது அகப்பொருள் துறையமைத்துப் பாடப்பட்ட 900 வெண்பாக்களையுடையது இந்நூல் என்று தெரிகிறது.

வீரசோழியம் அலங்காரப் படலம் 11-ஆம் செய்யுள் உரையில் பெருந்தேவனார், இந்நூற் செய்யுள் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள் இது :

வேட்டொழிவ தல்லால் விளைஞர் விளைவயலுள்
தோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்.

இச்செய்யுளைப்பற்றி உரையாசிரியர் மேலும் இவ்வாறு கூறுகிறார் : "இதனுட் சிறப்புடையளாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர்மாட்டு நிகழா நின்றமையில் நாட்டுக் கடைஞர் உள்ளார் சிறப்பில்லாத நந்தையூன் துப்புடைய ஆமையின் புறத்து உடைத்துத் தின்பர் என்னுமித னொற் றொருத்து விளங்கச் சொன்னமையால், தொகை மொழி யாயிற்று. வச்சத்தொள்ளாயிரம் முழுதும் தொகைமொழி எனக் கொள்க. தொகைமொழி எனினும் சுருக்கம் எனினும் ஒக்கும்."

கீழ்க்கண்ட இரண்டு செய்யுள்களும் வச்சத்தொள்ளாயிரச் செய்யுள்கள் :—

உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னகத் தெங்கையர்தம் பொற்கைநகச் சின்னங்கண்
டென்னகத் தேயெரிகை யால்.

வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
கூட லினியொருகாற் கூடாதோ—ஓடை
மதவாரணத் துதயன் வத்தவர்கோ னட்டிற்
கதவானதோ தமியேன் கண்.

சோழ அரசனுடைய படைத் தலைவனாகவும் சிற்றரசனாக வும் இருந்த வச்சன் என்பவன் வச்சராயன் என்றும் வத்த ராயன் என்றும் கூறப்படுகிறான். திரு. சதாசிவ பண்டாரத்தா ரவர்கள், தாம் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரத்தில் (பகுதி II பக்கம் 62-63) வச்சராயனைப்பற்றி இவ்வாறு கூறுகிறார் :—

"இவன், கஞ்சாறன் பஞ்சநதி முடிகொண்டானான வத்த ராயன் எனப்படுவான். சோழநாட்டுக் கஞ்சாறு என்னும் ஊரின் - பஞ்சநதிவாணன் என்பவனுடைய மகன். முடி கொண்டான் என்பது இவனது இயற்பெயர். முதலாங் குலோத்துங்க சோழனுடைய படைத்தலைவர்களில் ஒருவன். இச் சோழ அரசனால் வத்தராயன் (வச்சராயன்) என்னும் சிறப் புப் பெயர் அளிக்கப்பட்டவன்."

முதலாங் குலோத்துங்கன் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவனாதலின், அவன் சேனாபதியாயிருந்த வச்சராயனும் அக்காலத்தவனே. வச்சத் தொள்ளாயிரமும் அக்காலத்தில் இயற்றப்பட்டதே.

வச்சத்தொள்ளாயிரம் பாடிய புலவர்பெயர், அவர் வரலாறு முதலியவை ஒன்றும் தெரியவில்லை. இந் நூலைப்பற்றிய வேறு செய்திகளும் தெரியவில்லை.

## 101. வாய்ப்பியம்

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், தமது உரையில் வாய்ப் பியம் என்னும் நூலைக் குறிப்பிடுகிறார். வாய்ப்பிய நூலாசிரி யரை வாய்ப்பியனார் என்றும் வாய்ப்பியமுடையார் என்றும் கூறுகிறார். வாய்ப்பியம், இசைத்தமிழ் இலக்கணத்தைக் கூறும் நூல் என்று தோன்றுகிறது.

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் தமது உரையில், வாய்ப் பிய நூலிலிருந்து சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு :

"இவையெல்லா மொருபுடையொப்பினாற் பெயர் பெற் றன எனக் கொள்க. ஒன்றுக்கொன்று சிறப்புடைமை நோக்கி வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சியெனஇம்முறையே பாற்படுத்து வைத்தாரென்க. வெள்ளை யென்றும் பாவென்றும் நின்று வெண்பாவென்று முடிந்தது. வேதியர், அரசர், வணிகர், சூத் திரர் என்று சாதிமேற் சார்த்தி வழங்குவாருமுளர்.

"வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நால்வகை வருணம் போலப்
பாவினத் தியற்கையு மதனோ ரற்றே."

என்றார் வாய்ப்பிய முடையாராகலின்."

(யாப்பருங்கலம் : செய்யுளியல், 2. உரை மேற்கோள்.)

'மன்னவ னென்ப தாசிரியம்
வெண்பா முதலா நால்வகைப் பாவும்
எஞ்சா நாற்பால் வருணர்க்குரிய.'

என்றார் வாய்ப்பியமுடையாராகலின்".

(யாப்பருங்கலம் : செய்யுளியல். 2. உரை மேற்கோள்.)

" இனிப் பண் நான்கு வகைய. அவை பாலை யாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், செவ்வழி யாழ் என்பன. என்னை?

'பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகைப் பண்ணு நவின்றனர் புலவர்.'

என்றார் வாய்ப்பியனார். விளரி யாழோ டைந்து மென்ப. இனிப் பண்சார்பாகத் தோன்றியன திறமாம். என்னை?

'பண்சார் வாகப் பரந்தன வெல்லாந்
திண்டிற மென்ப திறனறிந் தோரே."

என்றாராகலின். அத்திறம் இருபத்தொரு வகைய.

'அராக நேர்திற முறழும்புக் குறுங்கலி
யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே.'

'நைவளங் காந்தாரம் பஞ்சுரம் படுமலை
மருள் வியற் பாற்றுஞ்
செந்திற மெட்டுங் குறிஞ்சியாழ்த் திறனே.'

'நவிர்படு குறிஞ்சி
செந்திற நான்கு மருதயாழ்த் திறனே.'

'சாதாரி பியந்தை நேர்ந்த திறமே
பெயர் திறம் யாமை யாழ்
சாதாரி நான்கும் செவ்வழியாழ்த் திறனே.'

என்றார் வாய்ப்பியனார்."

(யாப்பருங்கலம், ஒழிபியல் : விருத்தியுரை.)

'மதுவிரி வாகையும்
பொதுவியற் படலமும் புறமா கும்மே

என்றார் வாய்ப்பியனார்."

(யாப்பருங்கலம், ஒழிபியல்: உரைமேற்கோள்.)

'எப்பொரு ளேனு மொருபொருள் விளங்கச்
செப்பி நிற்பது பெயர்ச்சொல் லாகும்.

வழுவின் மூவகைக் காலமொடு சிவணித்
தொழில்பட வருவது தொழிற் சொல்லாகும்.

சுடுபொன் மருங்கிற் பற்று சேய்ப்ப
இடைநின் றிசைப்ப திடைச்சொல் லாகும்.

மருவிய சொல்லொடு மருவாச்சொற் கொணர்ந்
துரிமையோ டியற்றுபு துரிச்சொல் லாகும்.

என்பது **வாய்ப்பியம்.**"

(யாப்பருங்கலம், ஒழிபியல் விருத்தியுரை: மேற்கோள்.)

"இனிச் செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்க்கமும் ஆமாறு: நாற்பெரும் பண்ணும், இருபத்தொரு திறனும் ஆகிய இசையெல்லாம் செந்துறை. ஒன்பது மேற்புறமும் பதினோராடலும் என்றிவையெல்லாம் வெண்டுறையாகும் என்பது **வாய்ப்பியம்.**"

(யாப்பருங்கலம், ஒழிபியல்: உரைமேற்கோள்.)

வாய்ப்பியத்தைப்பற்றியும் இதனை இயற்றிய வாய்ப்பியனாரைப் பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

## 102. கருமாணிக்கன் கோவை என்னும் கப்பற் கோவை

இப் பெயரையுடைய ஒரு நூல் இருந்து இப்போது மறைந்துவிட்டது. திரு. மு. இராகவையங்காரவர்கள் "செந்தமிழ்" பத்திரிகையில் (தொகுதி 6: 1907-8.) எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இந் நூலைப்பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள் :—

"இக் கோவையில் சிற்சில அரிய பாடல்கள்மட்டும் இப்போது கேட்கப்படுவதாயினும் நூன்முற்றும் இதுவரை வெளி வந்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு வெளி வராமைக்கு, நூன்முழுதும் அகப்படாது போனமையே காரணமாகும். ஆனால், இக் கோவை முழுவதும் அடங்கிய பிரதியொன்று,

ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் தேவர்பிரான் கவிராயரவர்களால் இச் சங்கத்துக்கு (மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு)க் கிடைத் துள்ளது. இந் நூல் முழுமையும், "செந்தமிழ்," வாயிலாகச் சமீபத்தில் வெளி வரவுங்கூடும்."

இவ்வாறு 1909-இல் எழுதிய திரு. மு. இராகவையங்கார் அவர்கள், 1938-இல் வெளியிட்ட தமது "ஆராய்ச்சித் தொகுதி" என்னும் நூலில் இக் கருமாணிக்கன் கோவையைப்பற்றிய கட்டுரையின் இறுதியில் கீழ்க்கண்ட குறிப்பை எழுதியுள் ளார்கள் :—

"சில வாண்டுகளுக்கு முன் மதுரைச் சங்க மாளிகையில் நேர்ந்த அக்கினி பாதையால் எரிவாய்ப்பட்ட சுவடிகளுள், இக் கருமாணிக்கன் கோவையும் ஒன்று என்ற செய்தி யாவர்க்கும் பெருந் துக்கம் விளைவிக்கத் தக்கது. அதனால், இக் கோவை யுள், மேலே யானெழுதின பாடல்களுந் தொடர்களுமே இப்போது எஞ்சியுள்ளவை என்று சொல்லலாம். ஒருகால், இக் கோவைப் பிரதி வேறிடங்களில் உண்டாயின், அறிஞர் அதனை வெளியிட முந்துவார்களென்றே நம்புகிறேன்."

இக் கோவை இப்போது மறைந்துவிட்டதாகக் கருத வேண்டி யிருக்கிறது. ஏனென்றால், இதுகாறும் இந் நூல் இருப்பதாகச் செய்தி கிடைக்கவில்லை.

கருமாணிக்கன் என்பவன் பாண்டியனுடைய சேனைத் தலைவன். அன்றியும், பாண்டிநாட்டு முத்தூற்றுக் கூற்றத்தைச் சார்ந்த கப்பலூர், துவரங்குறிச்சி முதலிய ஊர்களை ஆண்ட சிற்றரசன். இவன் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இருந்தவன் என்று கருதப்படுகிறான். கருமாணிக்கன்மேல் இயற்றப்பட்ட கோவை கருமாணிக்கன் கோவை எனப் பெயர்பெற்றது. கப்ப லூரை யாண்டவன் ஆகையினால் கப்பற் கோவை எனவும் பெயர் பெற்றது.

கருமாணிக்கனுடைய கல் எழுத்துச் சாசனம் ஒன்று, எனது நண்பரும் பழம்பொருள் கலைச்செல்வங்களைத் தொகுத்து வருகிறவருமான இராவ் பகதூர் ஸ்ரீ S. T. ஸ்ரீநிவாச கோபா லாசாரியார் அவர்களிடத்தில் இருக்கிறது. அவர் அனுமதி பெற்று அந்தச் சாசனத்தின் வாசகத்தைத் தருகிறேன் :—

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கொமார பறுபர் திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ஒரு பத்தாவது. பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூர் கப்பலூருடை யான் கருமாணிக்காழ்வான் இயாதவ ராயனான காலிங்கராயன்

அகரம் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து வலிவல நாட்டு ஆதியூர்ப்பற்றில் அகரம் பரிவீர நாராயணச் சதுர்வேதி மங்கலம் இதுக்கு எல்லை ஆவது. கீழ்பாற்கு எல்லை நத்தத்துக்கு மேலைக்காலுக்கு மேற்கும் தென்பாற்கு எல்லை அறுபத்து நால்வர் வீதிக்கு வடக்கும் மேல்பாற்கு எல்லை சாலையூர் ஏரி நீர்பாயு முக்கூட்டுக் காலுக்கு கிழக்கும் வடபாற்கு எல்லை சாலையூர் எல்லைக்கு தெற்கும் ஆக இந் நாற்பால் எல்லைக்கும் உள் சந்த்ராதித்யவரையு முதல் அடங்கல் இறையிலி.''

இந்தக் கப்பலூருடையான் கருமாணிக் காழ்வானுக்கு யாதவராயன் என்றும் காலிங்கராயன் என்றும் வேறு பெயர்கள் உள்ளன என்பதும், இவன் கோமாரபன்மர் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியன் காலத்தில் இருந்தவன் என்பதும் இந்தச் சாசனத்திலிருந்து தெரிகிறது.

கருமாணிக்கன் கோவையாகிய கப்பற் கோவையைப்பற்றிச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும், ''ஆராய்ச்சித் தொகுதி''யிலும் கட்டுரை எழுதி திரு. மு. இராகவையங்கா ரவர்கள், இந் நூலிலிருந்து சில சொற்றொடர்களைமட்டும் மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆனால், முழுச் செய்யுள் ஒன்றையேனும் காட்டினார் இல்லை. ஆனால், நல்ல காலமாக, இந்தவொரு நூலில் கப்பற் கோவைச் செய்யுள்கள் சில காணப்படுகின்றன. வைத்தியநாத தேசிகர் அவர்கள் தாம் இயற்றிய இலக்கண விளக்கம் என்னும் நூலில் கருமாணிக்கன் கோவையிலிருந்து சில செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள்கள் இவை:

காவைப் பொருவுசெங் கைக்கரு மாணிக்கன் கப்பல்வன்னிக்
கோவைப் பொருசெய்ய வேற்கொற்ற வாளின் குறைநயந்து
மாவைக் குளிர்நிழ லாக்கிய வென்னை மறப்பினுமென்
பூவைக்கு நல்லுயிர் நீயுடம் பேகொண்டு போகின்றதே.

காரார் கொடைத்தடக் கைக்கரு மாணிக்கன் கப்பல்வெற்பி
னோராக நீர்கொண்ட நெஞ்சுதந் தாலந்த நெஞ்சுகொண்டே
யோரார் திருவுரு வெல்லா மெழுத வருமெனக்கு
வாரா திருப்ப தையோ மடவீருங்கள் வன்கண்மையே.

இறவார் குருகினந் தங்குபைங் கானலி னின்றளவும்
பிறவாத தொன்று பிறந்தது வேபெரு நீருலகிற்
சுறவார் கொடியுயர்த் தோன்றொண்டை மான்கப்பல் சூழ்திருநாட்
டுறைவார் தமக்கிது வந்தகுமோ சொல்லு மொண்ணுதலே.

இமையாத வேழமொ ரெட்டுங் குலகிரி யேழுமுற்றுஞ்
சுமையாற வந்தரு ளுந்தொண்டை மான்கப்பற் றேகையன்னீ

ரமையாத வன்புதந் தார்பிரிந் தாலரி தாற்றுவதென்
றமையா ளறிந்தல்ல வோசிவந் தாடன் ஞெருபக்கமே.

அதுநா மறிந்தில மன்னையிப் போதணி நீர்த்துவரைத்
துதிநா வலர்புக ழுந்தொண்டை மான்வெற்பிற் றேண்மெலிவும்
புதுநாண் மதிநுதல் வண்ணமும் பார்த்துப் புகையுயிர்த்தாள்
இதுநா மினியன்ன மேவண்ட லாடு மிடமல்லவே.

அரவுக்கு மெல்லியல் சாயலுள் ளேயுண் டறவிருண்ட
இரவுக்கினிய திருமுகந் தோன்று மெடுத்த வெண்ணைக்
கரவுக் கடியுண்ட மால்கரு மாணிக்கன் கப்பலன்று
யுருமிக்கு நீதந்த காமவெந் தீயுண்டெ னுள்ளத்திலே.

நாம்வந்த வேற்கை நரபால ஞவலர் பொய்வழுத்துந்
தோம்வந் தடர்வழித் தொண்டையர் கோன்கப்பல் சூழ்துறையில்
தேம்வந் தலர்புன்னை காள்கைதை கரிணையதற் சேர்ப்பர்கங்குல்
தாம்வந் தனர்கொலி யான்வந்து போனபின் சாற்றுமினே.

கருமாணிக்கன் கோவை யென்னும் கப்பற் கோவையை இயற்றிய ஆசிரியர் யார்; அவர் வரலாறு என்ன? இவையொன்றும் தெரியவில்லை.

## 103. நறையூரந்தாதி

இதுவும், அகப்பொருள் துறையமையப் பாடப்பட்ட அந்தாதி நூல். இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. இந் நூலிலிருந்து ஒரு செய்யுளைக் களவியற் காரிகை யுரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். அச் செய்யுள் இது:—

நல்லளந் தானு மமுதளந் தானு நகைக்குநல்ல
வில்லளந் தானுதற் கும்விலை கேட்கில் விரிதமிழின்
சொல்லளந் தானொரு பாவலர்க் காய்த்துறை யூர்நறையூர்
நெல்லளந் தானளந் தானெடு நாட்டிற்கு நேர்நிற்குமே.

துறையூரைச் சேர்ந்த நறையூரில் இருந்த ஒருவர் மீது இவ்வந்தாதி பாடப்பட்டதென்பது தெரிகிறது.

(தொடரும்)

# கவுந்தியடிகள்

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்]

கவுந்தியடிகள் சமணசமயத் துறவியாவர். இவர் பெண்பாலர். இவர் தங்கியிருந்த பள்ளி கவுந்திப்பள்ளி எனப்பட்டது. அப்பள்ளியினை இவர் காவிரிப்பூம்பட்டினத்துக்கு மேற்கில் ஒரு காவதத் தொலைவில் அமைத்து அருளறம் மேற்கொண்டிருந்தார். கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டு வந்த காலத்தில் இவ்வடிகளைக் கண்டான். அவன் கருத்தைக் கேட்ட இவர், தாமும் மதுரை செல்லும் எண்ணத்தை முன்னரே யுடையராதலின், அவனுடன் புறப்பட்டார். கண்ணகியை மதுரைநகரில் இடையர் குல மாதரி வீட்டில் அடைக்கலமாக இருத்தும்வரையிலும் உடனிருந்து நீங்கிப் பின்னர்க் கோவலன் கொலையுண்டதும் கண்ணகி மதுரையை அழித்ததும் ஆகியவற்றைக் கேட்டு உண்ணா நோன்பிருந்து உயிர்பதிப் பெயர்த்தனர்.

இவர் துறவியாயினும் முற்றத் துறந்தவர் ஆகார் என்னலாம்; அஃதாவது துறவிக்குரிய இலக்கணம் முழுமையும் வாய்க்கப் பெற்றிலர் என்னலாம். இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் சின தர்மங்களாகிய நற் காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவை இன்றியமையாதன. நற்காட்சியாவது கடவுள், அவரருளிய நூல், முனிவர், உயிர் முதலிய ஒன்பது பொருள்கள் ஆகியவற்றை அறிந்து அவற்றில் நம்பிக்கை வைத்தல். நல்லறிவு என்பது கடவுள் அருளிய உயிர் முதலிய பொருள்களைப்பற்றிக் கூறும் நூல்களை அறிதல். உயிரை வினை பற்றாதபடி விரதங்களைக் கொண்டு நடத்தல் நல்லொழுக்கம். இவற்றுள் கவுந்தியடிகள் பின்னிரண்டும் முற்றும் வாய்க்கப் பெற்றவர் என்னலாம். நற் காட்சியில் மட்டும் ஐயம் உண்டு. நற்காட்சியின் வகைகள் எட்டாகும். அவற்றுள் ஒன்று குறையினும் நற்காட்சி பயனில்லாது போம். நம் கவுந்தியிடம் அவ்வெட்டும் இருந்தன என்று கூற முடியாது. அவ்வெட்டாவன :

1. கடவுள் கூறியனவற்றை ஐயம் கொளலின்றி நம்புதல். இந் நிலையுடையவர் அடிகள் என்பதை, கோவலனுடன் மதுரை நோக்கி வந்தபோது திருவரங்கத்தை யடுத்த பொழிலில், வந்து தோன்றிய சாரணர் கூறிய மொழியாகிய,

> " விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
> யோதிய வேதத் தொளியுறின் அல்லது
> போதார் பிறவிப் பொதியறையோர் " (சில. ௧0 : ௧௫௯-௬௧)

என்பதை, உறையூர் போந்து தங்கிய காலத்து ஆங்கிருந்த கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லாம் தாம் கூறியதால் அறியலாம்.

2. காம நுகர்ச்சி விருப்பில்லாமை. துறவு கொண்டமையால் காம விருப்பின்மை புலப்படும். அன்றியும பிற பொருள்களிடத்தும் காமம் இல்லாமையை, உறையூரை நீங்கிச் சென்ற இடை வழியில் மாடலன் மதுரைக் கேகும் வழி கூறுமிடத்துத், திருமால் குன்றத்துப் பிலங்கள் மூன்றன் இயல்புகளைக்கூற, அவனை மறுக்கும்போது, அவற்றை விரும்பாமையை உரைத்து,

"வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்" (சில. கக: கஙஅ-கூ)

என்றும் கூறியதால் உணரலாம்.

3. நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய மூன்றையும் உடையவர்களிடம் உடல் மாசு கண்டால் அருவருப்படையாதிருத்தல். இந்நிலையுடையவர் அடிகள் என்பதற்குச் சான்றுகள் வேண்டா, வரலாற்றில் அத்தகைய இடம் இல்லாமையால். ஆனால் சாரணர்க்கு வணக்கம் செலுத்திச் சிறந்தார் அடிகள் என்று அமையலாம்.

4. பிற சமயத்தை உண்மையென்று மயங்காமை. திருமால் குன்றத்தையும் திருமாலையும் சிறப்பித்த மாடலனிடம் "காமுறு தெய்வம் கண்டடி பணிய நீ போ," என வெறுத்துக் கூறியதும், ஓரிடத்தில்

"காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தெந்நா" (சில. க0: கக௯-எ)

என்று கூறியதும் நாலாம் நிலையும் உடையர் என்பதை விளக்கும்.

5. பிறர் குற்றங்களை வெளிப்படுத்தாது மறைத்தல்.

6. அறத்தில் வழுவியவரை மீண்டும் அதில் நிறுத்துதல்.

7. அறத்தில் நின்றாரை விரும்புதல்.

8. அறத்தின் பெருமையை யார்க்கும் உரைத்தல்.

இவற்றுள் பின் மூன்றும் வழுவாது போற்றியிருப்பர் அடிகள். சிலப்பதிகாரம் ஒன்றே அடிகளைப்பற்றி யறிதற்குரிய நூல். அதனிடமாக இவற்றிற்குச் சான்றுகள் காண்டற்கில்லை. ஐந்தாம் நிலையினை அறப்பழி நீக்கல் என்று தமிழிலும், உபகூஹனம் என்று வட மொழியிலும் கூறுவர். இந்நிலை நம் அடிகளிடம் இருந்ததா என்பது ஈண்டு நாம் காண வேண்டுவதாம். அறப்பழி நீக்கலாவது,

"அறத்துக் கலர்களைத லெவ்வகை யானும்
திறத்தின் உபகூ வனம்" (21)

என்று அருங்கலச் செப்பு கூறும். இந்நிலையை உறுதியாகக் கொண்டதால் நன்னிலை யடைந்தமைக்கு சிநேந்திர பக்த சிரேஷ்டி என்பவனைச் சான்று கூறும் அந் நூல். அவன் வரலாற்றினை நாம் அறிய வேண்டுவது ஈண்டு இன்றியமையாததே.

"சிநேந்திர பக்தன் என்பவன் கௌடதேசத்துத் தாம்ரலிப்த நகரத்துப் பெருஞ்செல்வன். இவன் தன் ஏழடுக்கு மாளிகையில் மேல்தளத்தில் பார்சுவ தீர்த்தங்கரரை வைத்து அதற்கு முக்குடையமைத்து அதன் உச்சியில் விலையுயர்ந்த வைரமணி பதித்துத் தீர்த்தங்கரரை வழிபட்டுவந்தான். அம் மணியை யடைய விரும்பிய சௌராஷ்டிர தேசத்துப் பாடலீபுர நகர இளவரசன் சுவீரன் என்பவன் தீயோனாகிய சூர்ப்பன் என்பவனிடம் அதனைக் கொணருமாறு கூறி ஏவினன். அவன் தன்னை ஒரு தவநிலையினன் என யாவரும் நம்பும்படி நடித்து, சிநேந்திர பக்தனையும் நம்பச்செய்து, அவன் மாளிகையடைந்து, அவனால் அவ்விடத்துக்குக் காவலனாகவும் இருந்தான். அக்காலத்துச் சிநேந்திரபக்தன் வாணிக நிமித்தம் கடல் பயணம் செல்ல நகர்ப் புறத்து ஒரு மாளிகையில் தங்கினான். அப்போது சூர்ப்பன் நடு இரவில் வைரமணியைத் திருடினன். அம்மணியின் ஒளியினால் மற்றைய காவலர் உணர்ந்து, அவனை மணியுடன் தம் தலைவனிடம் கூட்டிச்சென்றனர். சிநேந்திரபக்தனும் அவனைத் தொல்லைக் குட்படுத்துவது சின தர்மத்திற்கு மாறுபடும் என எண்ணி "இம்மணியை யானே எடுத்துவரச் சொன்னேன்; இம் மகானைத் திருடன் என்பது தவறு," என்று கூறிக் காவலரைப் போகச்செய்து அவனுக்கு நல்லுரை புகன்று அனுப்பினான். காலப்போக்கில் தவம் செய்து முத்தியடைந்தான் சிநேந்திரபக்தன்."

"புகாரைவிட்டு வந்த காலத்தில் இடையில் வம்பப் பரத்தர் இருவர், கோவலன் கண்ணகியைச் சுட்டி, 'யாவர் இவர்?' என வினவ, 'என் மக்கள்' என்றார் அடிகள். அதற்கு அவர்கள் 'உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை கடவது முண்டோ கற்றறிந்தீர்,' என எள்ளினர். உடனே கவுந்தி அவர்களைக் குறுநரியாகென மனதில் சபித்தனர். அவர்களும் நரிகளாயினர். உணர்ந்த இருவரும் 'செய்தவத்தீர் நும் திருமுன் பிழைத்தோர்க்கு உய்திக்காலம் உரையீர்,' என வேண்டினர். பின்னர் அடிகளும சாபவிடையளித்தனர்."

இல்லறத்தானாகிய சிநேந்திர பக்தனுக்கும் துறவியாகிய கவுந்திக்கும் வேறுபாடு கண்டுணர்க. அஞ்ஞானிகளாகிய

வம்பப் பரத்தர்கள் எள்ளினும் பொருட்படுத்தாது விடுதல் செய்யத்தக்கது. அதை விடுத்துச் சபிப்பது துறவிக்கேற்ற தன்று.

"பாவம் பொருந்துவன சொல்லாமை ஏவாமை
யாகும் இரண்டாம் வதம்"

என்ற சத்யாணுவிரத நிலையினையும்,

"பிறர்கண் வருத்தமும் சாக்காடும் கேடும்
மறந்தும் நினையாமை நன்று"

என்று சமாயிகபாவனைக்குரிய கொள்கையினையும் மறந்தனராவர் அடிகள். அப்பரத்தராது கூற்று அடிகட்குக் கோபத்தை விளைத்தது. அடிகள் துறவியாதலின் கோபம் கொள்ளுதல் தவறாகும். அவர் மேற்கொள்ளவேண்டிய விரதங்கள் அணு விரதங்களும் மகாவிரதங்களும் ஆம். அணுவிரதம் கொளற் கேற்பக் கோபம் சிறிது கொள்ளலாம் என்றாலும் சபித்தது தகாது என்னலாம். எனவே, பிழை பொறுக்கும் குணம் இல் லாதவரானார் என்னலாம். எனவே, ஐந்தாம் நிலையினைக் கைவிட்டவராவார் என்னலாம். நற்காட்சிக்குரிய எட்டு நிலை களுள் ஒன்று நீங்கினும் நற்காட்சி பயன் இல்லையாகும்.

"உறுப்பிற் குறையிற் பயனின்று காட்சி
மறுப்பாட்டின் மந்திரமே போன்று"

என்பது அருங்கலச் செப்புப் பாட்டாம். "நற்காட்சிக்குரிய எட்டு உறுப்புக்களில் ஒன்று குறையினும் பயனில்லை; எது போல எனின்? மாறுபட்ட மந்திர செபம் பலன் தராததுபோல என்க" என்பது அதன் பொருள். "மாறுபாடான செப மாவது, கருடன் என்ற புத்தியினால் கொக்கைத் தியானித்தல்" என்க. கவுந்தியடிகள் ஐந்தாம் உறுப்பாகிய அறப்பழி நீக்கல் என்றதைக் கொள்ளாமையின், நற்காட்சியே கைவரப்பெறாதவ ராயினர் என, எண்ண வேண்டியுளது. அதனால் முக்காலத் தையும் உணரும் அவதிஞானம் இவர்க்கில்லையாயிற்று. இதனை அடியார்க்கு நல்லார் கூற்றால் உணரலாம்.

தன்பால் வந்த கோவலனையும் கண்ணகியையும் நோக்கிக் கண்ணகியின் மென்மைக்கிரங்கி மதுரைக்குக் காடிடையிட்ட வழியே நடந்துசேறல் தக்கதன்று என்று கூறிப் பின்னரும், யான் செலவை ஒழிமின் எனக் கூறவும் ஒழிகின்றிலீராயினீர் என்றார் அடிகள். "உரியதன்றீது ஒழிகென ஒழியீர்" என்பது அவரது கூற்று. இவ்வடியின் உரைக்கீழ் அடியார்க்கு நல்லார் எழுதுவனவற்றைக் காண்பாம் :

"ஒழிகென ஒழியீர் என்பதற்கு இவர்க்கு எதிர்வ தறிந்து கூறினர் எனின், "தவந்தரு சிறப்பிற் கவுந்தி........ உண்ணு நோன்பொடு உயிர்பதிப் பெயர்த்ததும்" என நீர்ப்படைக் காதையுள் மாடலன் கூறுதலாலும், அடைக் கலக் காதையில் "தன் குலவாணர் அரும்பொருள் பெறு நரின் விருந்தெதிர்கொண்டு, கருந்தடங் கண்ணியொடு கடிமனைப்படுத்துவர், உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும், இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்" எனவும், "தாயு நீயே யாகித் தாங்கு" எனவும், "மிகப் பேரின்பந் தருமது கேளாய்" எனவும் ஒரு பொழுதிற்கு இத்துணை ஓம்படையெல்லாம் கூறவேண்டா ஆகலானும் இவர்க்குத் தவப்பயனுலே சபித்தலன்றிக் காலவுணர்ச்சியின்மை யுணர்க."

இவ்வாறு கூறிய அடியார்க்கு நல்லார் இதனையே பிறிதோ ரிடத்தும் வலியுறுத்தினர். திருவரங்கப் பக்கப்பொழிலில் சாரணர் வந்து தோன்றக்கண்ட அடிகள் வணங்கினர். சாரணர் வந்தமையைக் கண்டறிந்தார் அடிகள் என்றூர் இளங்கோ வடிகள். 'கண்டறி கவுந்தி' என்பது அவர் கூற்று. இதற்கு விசேடமாக அடியார்க்கு நல்லார், "கண்டறி கவுந்தி என்பதனுலும் காலவுணர்ச்சியின்மை யுணர்க" என்றூர். எனவே, அடிகளுக்குக் கால உணர்ச்சியின்மை பெறலாம். பிழை பொறுத்தலும் கால உணர்ச்சியும் இல்லாமையால் அடிகள் துறவியாயினும் துறவின் இலக்கணம் முற்றும் நிரம்பப் பெற்றவராகார் என்னலாம். துறவின் ஆரம்ப நிலையினரே என்னலாம்.

இனி, சைவ தர்மப்படி இவர் பெற்றிருந்த தவத்தின் ஆற்ற லையும் இழந்துவிட்டவராவர் என்னலாம். குணமென்னும் குன்றேறி நின்ற துறவிகள் வெகுளிகொள்ளல் தீதாகும். அவர்கள் வெகுளிக்கு ஆற்றல் உண்டு; கணமேயும் காத்தல் அரிதுதான். ஆனல், அவர்கள் வெகுளியைக் காட்டிவிடுவ ரேல்—சபிப்பரேல், இதுகாறும் அரிதில் முயன்று ஈட்டிய தவப் பேறு அனைத்தையும் இழந்தவராவர். இது சின தருமக் கோட்பாடு. பிறரைச் சபித்துத் தவவலியைப் போக்கிக்கொண் டவர்கள் மீண்டும் தொடக்கத்திலிருந்து தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது விதி. அம்முறையில் கவுந்தியடிகளும் வம்பப் பரத்தரைச் சபித்தமையால் தம் தவ ஆற்றலை யிழந்திருக் கவேகூடும். எனவே வம்பப்பரத்தரைச் சபித்த ஒன்று கவுந்தி யடிகளைச் சின தருமத்திற்குத் தகுதியற்றவராக்கியது என்க. சைன முனிவர்—துறவிகள் சபித்ததாகவே எங்கும் காண முடியாது.

# காவியக் காதல்

[திரு. பி. எல். சாமி. பி. எஸ்ஸி]

எந்தக் காதற் காவியத்தின் முதல் ஏட்டைப் புரட்டினாலும், 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்,' என்ற குறளின் கருத்தையே முதலில் பார்க்கலாம். அதன் கடைசி ஏடு,

'அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு'

என்ற குறளின் கருத்தையே ஏந்திநிற்கும். இந்த இரண்டு குறள்களின் கருத்தும் முன்னரோ பின்னரோ நடுவிலோ, அஃகியோ அகன்றோ காணப்படாவிடில், காதல், காவியக் காதலாக முடியாது. அக் காதல் மேடைக் காதலாக இருக்கலாம், படக்காட்சிக் காதலாக இருக்கலாம்; ஏட்டுச் சுரைக்காய்க் காதலாக இருக்கலாம்; அல்லது காதலாவது கத்தரிக்காயாவது என்று கேட்கும் இனத்தாரின் கத்தரிக்காய்க் காதலாகவும் இருக்கலாம்.

இந்தக் காவியக் காதல் (Lyric love) ஒரு சிலருக்கே கைகூடுவது. ஆதலின் வள்ளுவர் இதன் அருமை நோக்கி,

'மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்'

என்று கூறினார். காதல் துறையில் கரைகண்ட பால்சக் என்ற பிரெஞ்சு ஆசிரியர், 'காதல் மெல்லிய மலர்போன்றது. தொட்டாலும் கொறுங்கிவிடும்,' என்று கூறியுள்ளார். காவியக் காதல் இனிய யாழ்போன்றது. மீட்டத் தெரிந்தவருக்குத் தான் ஒவ்வொரு நரம்பும் வேண்டிய இனிய இசையைத் தரும். கோவலனின் காதலை இழந்த மாதவியின் கைவிரல், பகை நரம்பில் பட்டு துன்பத்தைத் தந்தது. அதுபோல் காதலாகிய யாழை மீட்டத் தெரியாதவர்கள், பகை நரம்பில் கைவைத்து அவல இசையை உண்டு பண்ணுகிறார்கள்.

ஹெர்பர்ட் பென்சர் என்ற ஆங்கில தத்துவ ஞானி காதலை ஆய்வகத்தில் பிரித்துப் பார்த்துப் பார்த்து ஆராய்வது போல் ஆய்ந்து பார்த்தார். காதலில் முதல் உணர்ச்சி வியப்பு (Admiration) என்று எழுதியுள்ளார். அடுத்து மதிப்பு, அழகு, அன்பு என்று வரிசைப் படுத்தியுள்ளார். பண்டைத் தமிழரும் காதலில் முதலுணர்ச்சி வியப்பெனவே கருதினர். ஆதலின்,

கவிகளிலும் காவியங்களிலும் வியப்பையே முதலில் பாடியுள்ளனர். வள்ளுவரின் இன்பப் பாலின் முதற் குறளும் வியப்பையே தெரிவிக்கின்றது. உலகில் பல அறிஞர்கள், ஆசிரியர்கள், கவிகள் இந்த வியப்புணர்ச்சியைக் காதலுக்கு வாயிலாக வைத்துப் பாடியுள்ளனர். வொர்ட்ஸ் வொர்த், பிரௌனிங், ஜே. பி பிரீஸ்ட்லி ஆகிய ஆங்கில ஆசிரியர்களும் இதே முதல் ஏட்டைத் தான் திருப்பி இருக்கின்றனர். பிரீஸ்ட்லி ஒரு தலைசிறந்த நாடகாசிரியர். அவருடைய 'பொதுமக்கள் பாடட்டும்,' என்ற கதையில், கண்டதும் காதல்கொண்ட ஓர் இளைஞன் வருகிறான். அவ் விளைஞன் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் காதலித்த பெண்ணும் அன்றாடம் வேலைசெய்து பிழைக்கும் பெண். பொதுக் கூட்டத்தில் கண்ட இருவரும் காதல் கொள்ளுகின்றனர். அப்பொழுது அந்த எளிய பெண் தொழிலாளியைப் பற்றி இளைஞன் என்ன நினைக்கின்றான்? 'இவள் எகிப்துப் பேரழகி கிளியோபத்ராவோ, சீபாதேயத்து இளவரசியோ, ஆல்ப்ஸ் மலைமேலெழும் இளங்கதிரோனின் காட்சியோ, பசிபிக் கடலில் காணும் தண்ணிய நிலவோ,' என்றெல்லாம் வியப்பதாக பிரீஸ்ட்லி கூறுகிறார். வியப்பு, இளைஞனைக் கவியாக்குகின்றது.

காதல் கொண்டதும் முதலுணர்ச்சி வியப்பு. அந்த வியப்புணர்ச்சிக்குக் காரணம் ஒரு மயக்கம். மயங்கிய மனநிலையுடைய மையல் கொண்டோனின் வியப்பு, 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்,' என்று சொல்லச் செய்கிறது. தமிழ்த் தலைமகன் கூறும் முறை வேறு. ஆங்கிலத் தலைமகன் கூறும் முறைவேறு. காரணம் சூழ்நிலை மாற்றம். ஆனால், வியப்புணர்ச்சியே எல்லாவற்றிற்கும் அடிப்படை. இந்த வியப்புணர்ச்சி பகுத்தறிவுக்கு உட்பட்டதல்ல. அவள், நமது கண்ணிற்கு அழகற்றவளாகத் தோன்றலாம். ஆனால் காதல்மயக்கம் கொண்டவர்களுக்குத், தான் கண்ட பெண், பேரழகியாகவும் தெய்வீகப் பெண்ணாகவும் தோன்றலாம். பெர்சியப் பழமொழி, "லைலாவின் அழகைக் காண மஜ்னூனின் கண்கள் வேண்டும்," என்று கூறுகிறது. காதலுக்குக் கண்ணில்லை என்பர். ஆனால் காதலருக்கு இருக்கும் காதற்கண்கள், நமக்கில்லை என்பதையே அது காட்டுகிறது.

இந்த வியப்புணர்ச்சியை 'She was a Phantom of delight' என்ற கவிதையில் வொர்ட்ஸ் வொர்த் முதல் வரியிலேயே அழகாகக் காட்டியுள்ளார். 'அவள் ஒரு அருவ ஆனந்தக் காட்சி,' என்று சொற்களால் கட்டிவராத ஒருருவமாக வொர்ட்ஸ் வொர்த் காண்கிறார். பாரதியாரும், 'பெண்மைதான் தெய்வீக மாங் காட்சியடா,' என்று பாடியுள்ளார். 'தரையில் நடமாடும் தெய்வ மகளோ,' என்று அதே வொர்ட்ஸ் வொர்த் கூறுகிறார்.

வள்ளுவரும் யாவரும் கண்டறியாத கற்பனைத் தெய்வ மகளோ என்று கூறுகிறார். 'அணங்கு கொல்,' என்று வள்ளுவர் கூறிய சொல்லே பல கவிகளில், பாடல்களில் வேறுகோலங்கொண்டு பயின்று வருகிறது.

'அணங்கு கொல்' என்று காணுத ஒன்றில் தனது வியப்பை ஏற்றிவைத்த தலைமகன், அடுத்து ஒரு படி இறங்கு கிறான். தான் கண்டவற்றில் சிறந்ததன் மேல், உயர்ந்ததன் மேல் உணர்வை ஏற்றுகின்றான். விண்ணில் சிறகடித்துப் பறக் கும் பறவையைக் கண்டால் கவியுள்ளம் படைத்த மனிதனின் கற்பனையும் இறக்கையடித்து மேலேறுகிறது. தனது அழகி ளுல் மனித உணர்ச்சியைக் கனிவாக்கிக் கற்பனையைத் தூண்டி விடும் உயிர்களில் பறவை முதன்மை இடம் பெற்றுள்ளது. ஆதலின் உலகில் காதல் உணர்ச்சியோடு, பறக்கும் புள்ளினங் களை இணைத்துக் கவிகள் பாடுவதைப் பார்க்கலாம். 'இருதலைப் புள்ளின் ஒருயிரம்' என்று இல்லாத பறவையைக்கூட உலகில் உண்டுபண்ணுகின்றனர்! நாரையைத் தூதனுப்புகின்றனர்! குயிலையும் மயிலையும் பழிக்கின்றனர்! கிள்ளையைக் கையிலேந்திச் 'சொல்ல வல்லாயோ அவன் வல் வரவை' என்று கெஞ்சு கின்றனர்! காதலுக்கும் பறவைக்குமுள்ள நெருங்கிய தொடர் பையே இது காட்டுகின்றது. வள்ளுவரும் 'ஆய் மயில் கொல்' என்கின்றார். பல காலமாகப் பறவையை உணர்ச்சியின் ஊர்தி யாகக் கொண்டதையே அது காட்டுகின்றது. தமிழ்நாட்டுப் பறவைகளில் அழகியது மயில். பிற நாட்டிற்குத் தமிழ் நாடு மயிலை ஏற்றுமதி செய்தது. பிற நாட்டு மொழியில் 'தோகை' என்ற சொல் புகுமளவு அந் நாட்டு மக்களின் கண்களைக் கவர்ந் தது மயில். அத்தகைய மயிலெனவே நினைக்கின்றான் வள்ளுவர் தந்த தலைமகன்.

ஆங்கிலக் கவிகளில் காதல் வாழ்வை ஏட்டிலும் பாட்டிலு மன்றி வீட்டிலும் கடைப்பிடித்த ஒரு தனிக் கவி, 'ப்ரௌனிங்' என்பவர். ஆதலின் அவர் காதலைப்பற்றிப் பேசுவதை உண்மை யில் நம்பலாம். "ஓ காவியக் காதலி, நீ பாதி அணங்கு பாதி பறவை" (O! Lyric love, half angel and half bird") என்று அவர் வியந்து பாடுவது 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்' என்ற குறளுடைய எதிரொலி போலிருப்பது மிகவும் வியப்பிற் குரியது. காலத்தானும் இடத்தானும் அருகே இருந்தாலும் எட்ட இருந்தாலும் கவியுள்ளம் ஒரே வழியில் உணர்கிறது! எண்ணுகிறது!

ஆணும் பெண்ணுமாக இயற்கையைக் கண்ட தத்துவ ஞானி தனது வியப்பில் கடவுளையும் பாதி ஆணகவும் பாதி

பெண்ணாகவும் உருவகப்படுத்தினான். அது போல் இக் காதற் கடவுளும் 'பாதி பரதேவதையாகவும் பாதி பறவையாகவும்' வியப்பிலாழ்ந்த கவியுள்ளங்களுக்குத் தோன்றுகிறது. 'கிண்டு ரர்கள்' (கந்தருவர்கள்) என்ற வடமொழி இலக்கியத்தில் வரும் காதலர்கள், பாதி மனித உருவமும் பாதி பறவை உருவமும் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இந்த வியப்பே குறுந்தொகைக் காதலியை,

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே."

என்று பெருமையாகப் பாட வைக்கின்றது. இந்தக் காதலிக்கு அவள் காதலை அளக்க ஒரு அடிக்கோலும் உலகிலேயே கிடைக்க வில்லை. அந்தக் காதலுக்கும் நீள, அகல, உயரம் இருக்கின்றன. ஆனால் அதன் பரப்பு நிலத்தைவிடப் பெரிது. உயரம் வானையும் விட எட்டியது. ஆழம் கடலினும் கடந்தது. தற்காலம் 3 - D - படக் காட்சியைக் காணலாம். அதுபோலக் காதலிலும் 3 - D-க் காதல் உண்டோ! காதல் கைகூடப் பெற்றோரையும் புறக்கணித்த எலிசெபெத் பிரௌனிங் என்ற ஆங்கிலக் கவி தனது காதலை அளக்க முற்படுகிறாள்.

"How do I love thee? let me count
the ways
I love thee to the depth and breath
and height,
My soul can reach when feeling out
of sight"

தனது உள்ளம் எவ்வளவு உயரம், எவ்வளவு ஆழம், எவ் வளவு அகலம் செல்லுமோ அவ்வளவு அளவு காதலிப்பதாக, பிரௌனிங் என்ற கவியைக் காதலித்த எலிசபெத் பிரௌனிங் என்ற கவி கூறுகிறாள். பெருமை வியப்பில் காதலின் நீள அகல உயரத்தை அளக்கவும் முற்பட்டு அளக்க ஏற்ற அளவின் றித் தவிக்கிறார்கள். அவர்கள் வியப்புத்தான் அளவற்றதாக இருக்கின்றதே! காதலர்கள் எங்கிருப்பினும் ஒரே மொழியில் தான் பேசுவார்கள்போ லிருக்கின்றது! இல்லையேல் குறுந் தொகைக் காதலியும் எலிசெபெத் ப்ரௌனிங்கும் தாங்கள் கொண்ட காதலுக்கு நீள அகல உயரம் பார்ப்பார்களா!

தனது காதலைப்பற்றி எண்ணும்போது அது எதிர்பாராத நிகழ்ச்சியாகத் தோன்றுகின்றது. ஏதோ ஒருவருக்கும் தெரி

யாத ஒரு சத்தி தங்களைக் கூட்டி வைத்ததாக வியக்கின்றார்கள். அதை விதி என்றழைக்கின்றனர். பண்டை நூல்கள் அதைப் 'பால்' என அழைக்கும். அந்த விதியை எண்ணி வியப்புத் தோன்றியக்கால்,

"யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே."

என்ற அழகான பாட்டு வெளிப்படுகின்றது. எங்கிருந்தோ வந்த நீர் எங்கேயோ உள்ள மண்ணில் கலந்து நீரும் மண்ணு மாக மண்ணும் நீருமாக ஒன்றித்துப் பிரிக்கமுடியாதபடி-நீரோ மண்ணோ என்று சொல்ல முடியாதபடி - மண்ணின் நிறத்தை நீர் ஏற்க, மண்ணினுருவை நீர் கொள்ள, ஒருருவாகியதுபோல இருவருடைய ஒட்டும் இரண்டுளமும் விட்டுப் பிரியாக் கூட்டு ஆகிவிட்டதைக் கண்டு காதலி வியக்கின்றாள். ஏனெனில் தனது தாயும் அவனது தாயும் ஒருவரை யொருவர் அறியார். தனது தந்தையும் அவன் தந்தையும் உறவினர் அல்லர். அவளும் அவனை முன்பின் அறியாள். ஆனால் கண்டதும் இரண்டுள்ளமும் கலந் தது, செம்மண்ணும் வான் மழையும் கலந்தது போல.

இந்த வியப்பு காதற்கனியான குழந்தை பிறந்ததும் தோன்றலாம். ஆனால் இதைப் புதுமை வியப்பென்று சொல்ல வேண்டும். அவர்கள் கண்டதும் கொண்ட பெருமை வியப்பு, குழந்தைச் செல்வத்தைத் தோற்றுவித்தது. அக் குழந்தை புதுமை வியப்பை உண்டுபண்ணுகிறது. அப்புதுமை வியப்பே ஆயிரம் ஆயிரமாண்டுகளாக தமிழ்த் தாயை "யார் யாரோ யாரிவரோ" (ஆராரோ ஆரிவரோ) என்று பாடவைத்தது; பாடவைக்கின்றது! யார் யாரோ என்று பெருமை வியப்புற் றாள் குறுந்தொகைக் காதலி. ஆனால், யார் யாரோ என்ற பெருமை வியப்பொடு, யாரிவரோ என்ற புதுமை வியப்பொடும் பார்க்கின்றாள் நெடுங்காலத் தமிழ்த் தாய், தொட்டியில் தவழும் குழந்தையைப் பார்த்து.

வியப்பு காதலில் முதலுணர்ச்சி. அவ்வுணர்ச்சி வெவ்வேறு கோலங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றலாம். அப்படித் தோன்றும்போது அக்காதல், கவியையும் காவியத்தையும் உண்டாக்குகின்றது அக்காதல் காவியக் காதலாகிறது.

(தொடரும்)

# அறிவறிந்த மக்கட்பேறு

[வித்துவான், திரு. செந்துறைமுத்து]

வையகத்தில் வண்ணச் சுவைமிக்கு வளம்பெற்ற நல் வாழ்க்கை என்பது, முறைப்பட நிகழும் நல்லற இல்வாழ்க்கையே. நல்லறம் தழைக்கும் இல்லத்தில், இன்னல்இருள் இடம்பெறுவதின்று. அறத்தின் பெருக்கம் அவ்விடத்து அழியா இன்பத்தை அளிப்பது ஒருதலே. நல்லறம் தழைக்கவும், நனிபல சிறக்கவும், இல்லறம் வளரவும், இன்பம் பெருகவும் பணியாற்றுவோள் வாழ்வின் ஒளிவிளக்கான மனைவி. அம் மனை விளக்காகிய மங்கல விளக்கு வீசிடும் சுடர்கள்தாம் மனையின் அணிகலமான மக்கட்பேறு. மனைவியின் நற்பண்பே, வந்த விருந்தினரை வரவேற்றுப் போற்றி, மேலும் வரும் விருந்தினரை எதிர்நோக்கி நிற்கச்செய்து இனியதொரு நிலையை நிலவப் பண்ணுகின்றது.

இல்லத்தை இனியதாக்கும் மனையாட்கு நற்பண்பும், அதனை அணிசெய்யும் அணிகலமும் அடையப்பெறுவதே அனைவருக்கும் சாலச் சிறந்தது என்ற கருத்தைத்தான் பொய்யில் புலவரும் வள்ளுவத்தில் வரையறுக்கின்றார்.

> மங்கல மென்ப மனைமாட்சி மற்றுஅதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு.

எங்ஙனம் பைங்கூழ் வளரப் பருவத்தில் மழை தேவையோ, செந்தாமரை மலரச் செங்கதிர் தேவையோ அதுபோன்றுதான் மனை சிறக்க, மனையறம் சிறக்க, மனையறம் வளர இல்லறத்தை நல்லறமாக்கும் மனைவியின் நற்பண்பும், தத்தித் தவழ்ந்து தேனூறும் செவ்விதழால் பூத்துக் குலுங்கும் புதுமலர்க் கோலம்போல் வலித்துத் தங்கத் தளிர்மேனிக் கட்டழகுக் கை மகவும் வேண்டும்.

அச்சின்னஞ் சிறார்கள் சிந்தும் சீரிய மழலைமொழிகள், சிதறிய உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் தீஞ்சுவை நற்சாறும். அம்மொழிகளின் ஒலி, 'கிறுகிறு'க்கச் செய்யும் குழலின் ஒலியைவிட—'கிண்'ணென்ற யாழின் இசையைவிட—இன்பம் பயப்பது! நன்மையளிப்பது என்று நவிலப்பட்டுள்ளது.

இட்ட பணியாற்றும் ஏவலாளர் பலர் இருப்பினும், சகடக் கால்போல் சுழன்றுவரும் செல்வம் பல இருப்பினும், மின்னும்

பின்னும் பொன்னிருப்பினும், மிளிரும் பொருள் இருப்பினும், சிரித்து விளையாடிச் சிந்தையை மகிழ்விக்கும் செல்வக் குழந்தைகள் இல்லாதிருப்பின் பெற்ற பொருளனைத்தும் பாழன்றோ? எனவேதான் பொய்யா மொழியார்,

> தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
> தம்தம் வினையான் வரும்.

என்கின்றார். ஏற்றுக்குத் " தம் பொருள் என்ப தம் மக்கள் " என உரைத்தது எனின், பெறத்தக்க பேறுகளெல்லாம் பெற்றிருப்பினும், மக்கட்பேறில்லாவிடில் மதிப்புடைப் பேறுபெற்றதாக அமையாது. மகப்பேறு ஒன்றுதான் மதிப்புடைத்து; மற்றைய பேறுகளனைத்தும் மதிப்புடைய பேறுகளன்று. ஆகவேதான் அம்மக்களைத் தம் பொருள்கள் என்று அறிஞர் பலர் உரைப்பதாக உணர்த்தியுள்ளார். அங்ஙனம் உணர்த்துவதிலும் மிக வன்மையாகத் தாம் கண்ட உண்மைக் கருத்தைக் கூறத் தவறவில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

> பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற.

என்பது. மக்கட்பேற்றை மதிப்புடைய செல்வமாகவும் தம்முடைய நிகரற்ற பொருளாகவும் கூறுவதற்குத் தக்க நிமித்தம் கூறலும் நன்மையே.

அவனிக் கடலில் அல்லல் அலைகளால் ஆடிக்குலையும் ஒருவனுடைய வாழ்க்கைக் கப்பல் அமைதியுற ஆண்டுத் தேவைப்படுவது நங்கூரம். ஈண்டு நங்கூரமாக அமைவது அறிவுடைய மக்கட் பேறு. இம்மக்களைப் பெற்ற ஞான்றுதான் பெருமகிழ்வு கொள்ளுகின்றனர். அவர்களை அளவில்லா இன்பம் அணுகுகின்றது. வாழ்வும் வளம் பெறுகின்றது. எனவேதான் மக்கட் செல்வம், மாண்புடைச்செல்வம் என்று மதிக்கப்படுகின்றது.

இம்மக்கட் சிறார்களின் செவ்வண்ணத்தளிர் விரல்கள் துழாவிய கூழ், அமிர்தத்தைக் காட்டிலும் அளவற்ற அருஞ்சுவை அளிக்கும். அத்துடன் நில்லாது தன் அழகுடலை அசைத்து, சிங்கார நடைபயின்று, முத்துப்பல் தெரிய முறுவலித்து, மோகன வாய்திறந்து, தீஞ்சுவைநீர் வழிய அன்புடன் கைநீட்டி, தெள்ளுதமிழ் மழலைமொழியில், 'அம்மா, அப்பா' என்று அழைத்து ஆடிவரும் கோலம், அன்பு உருவெடுத்துத் தேடிவரும் திறமாகும். அம்மழலை மொழியின் ஒலியைக்கேட்ட பெற்றோர்கள் அடையும் மகிழ்வுக்கு ஓர் அளவுடைத்தோ? அன்று. ஆகையால்தான் பாண்டியன் அறிவுடை நம்பியும்,

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைபடக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

எனப் புகன்றுள்ளார். இதன்கண் படைக்கப்படும் செல்வம் பலவற்றையும் படைத்திருப்பினும், அத்துடன் பலரோடு உண்டலையும் செல்வந்தர்களுக்கு இலக்கணமாக செப்பப்பட்டுள்ளது. அத்துடன் இல்வாழ்வார் எய்தும் இருமைஇன்பத்திற்கும் காரணமான நன்மக்கட்பேற்றையும் அழகுபட உரைக்கப்பட்டுள்ளது. நன்மக்கள் இன்றெனில் வாழ்வில் நல்லதொரு பயனின்று என்ற நற்கருத்தையும் காண இயலுகின்றது.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

என்று புகழேந்தியார் புகன்றிருத்தலை நோக்குமிடத்து அவரைப் போற்றாமல் இருக்க இயலவில்லையன்றோ!

வாழ்க்கையில் மாற்றத்தை உண்டுபண்ணும் அம் மகவு பிறந்து வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் பருவத்தை எய்துகின்றது. கல்வியைக் கருத்துடன் முடிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது. கல்வியில் முழுநாட்டம் செலுத்தும் அக்குழந்தையைப் பத்துத்திங்கள் சுமந்தெடுத்துப் பகலென்றும் இரவென்றும் பாராது பாலூட்டித் தாலாட்டி வளர்த்துக் 'கண்ணே! கண்மணியே! நற்கனியே! கனியின் சாறே! கன்னலே! கன்னல் தமிழ்ச்சுவையே!' என்றெல்லாம் பண்ணிசைத்துக் கண்ணின் கருவிழிபோல் கடமையுடன் பேணுகின்றாள், அவ்வன்னை.

அதுபோது அவள் செவிகளில் 'உன் செல்வன் ஒப்பற்ற சான்றோன்,' 'உன் மைந்தன் மனித இனத்தின் மாணிக்கம்' என்று ஊரவர் போற்றும் புகழுரைகள் ஒலித்தவண்ணமிருக்கின்றது. அதைக் கேட்ட அவ்வன்னை உடலும் உயிரும் சிலிர்க்க உவக்கின்றாள். அதுதருணம் இருந்த இன்னல், இருக்கும் இடம் அறியாது அகலுகின்றது. பெருந் துன்பப்பட்டு மகவைப்பெற்ற அப்போதைக் காட்டிலும் அளவற்ற அகமகிழ்வை எய்துகின்றாள்.

பெற்றுவளர்த்துப் பெருமகிழ்வுற்ற அந் நல்லவர்களுக்குப் பெரும்புகழ் நல்கும் தனயனை உத்தமனுக்குவது தந்தையின் கடனன்றோ! ஈண்டு உத்தமனுக்குவது என்பது அறிவுடைய சான்றோனுக்குவது என்று பொருள்படும். மக்கட்பேறு கிட்டு வதை மறுமைப்பேறு கிட்டியது என்று கொள்ளல் கூடும். எங்ஙனமெனில்? அறிவுடைய புதல்வனை அவனி புகழுகின்றது. பெற்றோர் இறந்த பின்னரும் மக்கள் அவர்களைப் போற்றித்தான் பின் அவ்வறிவுடைய மகனை வாழ்த்துகின்றார்கள். அவ்வாழ்த் தலின் பயன், அவர்களுக்கு நற்பேற்றை அணுகச் செய்யும் என்பர் அறிஞர். பெற்ற மக்களைப் பெரியோர்களாக்கும் பணி மிகச் சிறந்ததாகும். அறிவுடைய சான்றோனுகும் மகவைப் பெருது, அறியவேண்டிய நூல்களை அறிந்து ஒழுகும் சிறார் களைப் பெருது, அறிவற்ற பல மக்களைப் பெறுவதில் பயனின்று. ஆகவேதான், "அறிவறிந்த மக்கட் பேறு" என்று அழகாகத் தெய்வப் புலவர் விளம்பினுர்.

"பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனு லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றேது."

இந் நீதிவெண்பாவின்கண் உவமை முகத்தான் விளக்கப் படும் கருத்து எத்துணை அளவு ஏற்றமடைகின்றது? பன்றி பல குட்டிகளைப் பெறுதலினுல் பயன் ஒன்றுமில்லை. ஆனுல், யானைக்குப் பயனளிக்கும் அதன் கன்று ஒன்றே போதுமானது அதுபோன்று நல்லறிவற்ற பல பிள்ளைகளைப் பெறுதலினும் ஒரு நற்புதல்வனைப் பெறுதல் நன்றாகும் என்று தெளிவாக உரைக்கப்பட்டுள்ளதன்றோ!

பிள்ளையை அறிவுடைய பெரியோனுக்கும் தந்தையின் கடமையைக் கூறும்போது, 'தந்தை மகனுக்காற்றும் நன்றி' என்கின்றார் வள்ளுவத் தந்தை. அந்நன்றி யாது? தன் புதல் வனை அறிஞர்கள் நிறைந்த அவைக்களத்தின்கண் அனைவ ருக்கும் மேலான ஆய்வாளனுக ஆக்குவதேயாகும். இதனைத் தான் புறத்திலும் பொன்முடியார் என்ற பெண்பாற் புலவர் அறிவிக்கின்றார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

இதில் அன்னையானவள் அறிவிப்பதாகப் புலவர் தெரிவிக்கிறார். அஃதாவது, அன்னை, பிள்ளையைப் பெற்றெடுத்தல் என் கடன். அப்பிள்ளையைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடன். கற்கவேண்டியவற்றைக் கற்றுத் தெளிந்த அம்மகனுக்குக் கூர்வேல் வடித்துக்கொடுத்தல், கொல்லனின் கடன்; வேல்பிடித்த அவ்வீரனுக்கு வீரநடை நல்கல், வேந்தனின் கடன்; வீரநடை பயின்று வேல்பிடித்துச் செருக்களமேகும் அவ்வீரன் அன்னை, தந்தை, கொல்லன், வேந்தன் அத்தனைபேருக்கும் அழியாப் பெருமை நல்கல் வேண்டும். அப்பெரியோர்கள் அவனுக்காற்றிய நற்பணிக்கு அவன் நன்றி செலுத்தல் வேண்டும். அதுதான் மனிதப் பண்பாடு. அதுதான் அனைத்தையும் கற்றுத் தெளிந்த அறிவுடை மகனுக்கு அழகு. எனவே, அவன் செலுத்தும் நன்றி யாதெனின், அவன் கடன் என்னவெனின், ஒளிவீசித் திகழும் வாள்கொண்டு செய்தற்கரிய கொடிய போரில் இறங்கிக் களிறெறிந்து கொற்ற முரசுகொட்டி, வெற்றிக்கொடி பிடித்து, குருதிவாள் தாங்கி வீராவேசத்துடன் வரல், காளை போன்ற அம்மகனின் கடனாகும் என மொழிந்துள்ளது சாலச் சிறப்புடைத்தல்லவா ?

மற்று, மாநிலத்தில் மனிதனாகப் பிறந்து வளர்ந்து மக்கட் சமுதாயத்தில் மாண்புடன் கற்கவேண்டியவை எவை எவையுள்ளனவோ, அவையனைத்தையும் அறியக்கூடிய நன்மக்களைத்தான் நன்மக்கட்பேறு, அறிவறிந்த மக்கட்பேறு என்று கூறல் பொருந்தும். இளமைப் பருவத்தில் கற்ற கல்வியைப்போல் வாழ்க்கையில் பருவத்திற்கேற்பக் கற்கவேண்டிய துறைகளும் பல உள்ளன. ஆயின் கற்கவேண்டிய துறைகள் அனைத்தையும் கற்க, இளமையில் பயிலும் கல்வி இன்றியமையாததாம். கல்வி கைவரப்பெறவில்லையெனில், அம் மக்களின் வாழ்க்கையில் ஒளியில்லாது போதலுடன் களங்கம் படிகின்றது. அம்மக்களைப் பெற்றெடுத்த பெரியோர்களின் குடிப்புகழ் குன்றிச் சிறப்புகள் சிதைந்து, அவர்கள் உள்ளமும் சின்னாபின்ன மடைகின்றது. எனவேதான் நான்மணிக்கடிகையிலும்,

"மக்களைக் கல்லாது வளரவிடல் தீது"

என்று தீட்டப்பட்டுள்ளது. பெற்ற மக்களைக் கல்லாது வளரவிட்டால், மாண்புடைய குடியில் மாசுபடிவது திண்ணம். அம் மக்களின் வாழ்க்கையினை அல்லல் ஆட்கொள்ளுகின்றது. இக் காலத்து "பிள்ளையும் படிக்க வேண்டாம் பிரம்படி படவும் வேண்டாம், சள்ளையாஞ் சுவடி தூக்கிச் சங்கடப் படவும் வேண்டாம்" என்று சலித்துப் பேசும் மனிதர்களை அன்றாட வாழ்க்

கையில் நாம் காணக்கூடும். இவர்கள் இங்ஙனம் இருப்பதால் அளவிறந்த இன்னல்கள் அடைகின்றார்கள் என்பதும் உறுதி.

இக் கல்வியின் சிறப்பை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், "ஆசானுக்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று. தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளினிடத்தும் அன்னையின் உள்ளம், அறிவுடையோனிடம் மிக அன்புகொள்ளும். ஒரு குடியிற்பிறந்த பலருள்ளும் மூத்தவனை வருக என்னாது அறிவுடையோனையே அரசும் வரவேற்கும். வேற்றுமைப்பட்ட நாற்பாலுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்றால் மேற்பால் ஒருவனும் அவனைப் பின்தொடர்வான்," என்று நாட்டில் நிகழும் உண்மை நிகழ்ச்சியை மிக நன்றாகக் காட்டியுள்ளார்.

கல்வியில் தேர்ச்சியுற்ற இக் கலைச்செல்வர்களுக்கு யாதும் ஊர்; எவரும் கேளிர்; சென்றவிடமெல்லாம் சிறப்பு; செல்லும் தருணத்துக்கு ஆற்றுணவேண்டிய அவசியமின்று என்று நம் ஆன்றோரும் நவின்றனர்.

இச் செய்திகளின் மூலம் அறியக்கூடிய அரும்பொருள், எக்குடியினராயினும், எந்நாட்டவராயினும் எல்லாவற்றையும் அறியக்கூடிய மக்களைப் பெற்று, அம்மக்களைப் பெரியோர்களாக்குவார்களாக. பெற்றோரின் முயற்சியால் மக்களைக் கலைமாண்பு கைப்பற்றுகின்றது. கலையின் வளத்தைக் கண்டு அம்மக்கள் கழிபேருவகை எய்துகின்றனர். பெற்றோர்களும் பேரின்பமுறுகின்றனர். மக்கள் தாம் மகிழ்வதோடன்றி, தாம் மகிழ்வதற்குக் காரணமான கல்வியால் உலகம் இன்புறக்கண்டு மேன்மேலும் அக்கலையின்மீதே நாட்டம் கொள்ளுவர் என்பது நனிசிறந்தோரின் நல்வாக்கு.

உலகம் உவக்கும்பொழுது அம்மக்களின் குடிப்பெருமை உயர்வடைகின்றது. பெற்றோர்களுக்குப் பெயரும் புகழும் பெருகுகின்றது. இம் மகனைப்பெற அவர்கள் எத்துணைத் தவம் செய்தார்களோ! இவ்வுத்தமனை எத்துணை உழைப்பால் பெற்றார்களோ! என்று ஊரும் உலகமும் பெற்றோர்களைப் போற்றிப் புகழுகின்றது. ஆகையினால்தான் அமரகவி பாரதியாரும் இவ்வறிவறிந்த மக்களைச் 'சின்னஞ் சிறுகிளியே! செல்வக் களஞ்சியமே! பிள்ளைக் கனியமுதே! பேசும்பொற் சித்திரமே!' என்றெல்லாம் இயம்பிப் பூரிப்புக் கொள்ளுகின்றார். எனவே, 'அறிவறிந்த மக்கட்பேறு' அவனிக்கும் அவனியில்வாழ் மக்களுக்கும் ஓர் அழகுடைப் பேறன்றோ!

# மேலைநாட்டு மெய்விளக்கம்

[திரு. சு. அன்புமலர்]

## கிரேக்கநாட்டு மெய்விளக்க ஆராய்ச்சி

சாக்ரடீஸ் (Socrates)

அறிவு, உண்மை, நேர்மை, நன்மை, கடவுள் என்ற மெய் விளக்கத்துறைக் காரியங்கள் அனைத்திலும் யாவரும் ஒத்துக் கொள்ளக்கூடியனவும், யாவரையும் கட்டுப்படுத்தக் கூடியனவு மான கொள்கைகள் எதுவும் இல்லை என்று சோபிஸ்தர்கள் அறுதியிட்டுக் கூறினர். ஆனால் சோபிஸ்தர்களின் இக்கருத்து, கிரேக்கநாட்டுப் பிற அறிஞர்களைப் பின்னும்பின்னும் ஆராய்ச்சி யில் ஆழ்ந்து ஈடுபடத் தூண்டியது. உலகம், மனிதன் உலகில் தொடர்பு இவைபற்றிய ஆராய்ச்சிகள், மேன்மேலும் பெருகின.

உலகவரலாற்றில் அறிவின் எல்லையாகவும் மெய்யின் (தத்துவத்) தந்தையாகவும் போற்றிப் புகழப்படுகிற சாக்ரடீஸ் பெரியாருடைய காலத்திருந்து (கி. மு. 469—கி. மு. 399) மெய் விளக்க ஆராய்ச்சி முறையே சிறந்த மாறுதலடைந்தது என்று கூறலாம். ஒப்பற்ற அறிஞராக ஏத்தி இறைஞ்சப்படுகின்ற இப் பெரியாரின் வாழ்வைப்பற்றிச் சிறிது அறிந்திருத்தல் மிக்க இன்றியமையாததாகும்.

ஆதெனிஸ் நகரில் ஏழைத் தாய்தந்தையர்கட்குப் பிறந்த சாக்ரடீஸ் இளமையிலேயே எல்லாவற்றையும் எளிதிற் கற்கவும், உணரவும் முடிகிற கூரறிவு நிறைந்தவராக இருந்தார்.

பலவகைப்பட்ட மனிதர்களோடு போர், அரசியல், திரு மணம், சமயம், விஞ்ஞானம், முதன்மையாக ஒழுக்கக் காரியங் கள் போன்ற பல பொருட்களைப்பற்றி உரையாடுதல் அவருடைய உயர்ந்த பழக்கங்களில் ஒன்றாக இருந்தது. மிகுந்த நட்பத் தோடு பிறர் வாதங்களில் காணும் குற்றங் குறைகளையும், முரண் படு தன்மைகளையும் தம்முடைய சொல்நயத்தால் சுட்டிக் காட்டுவது, அவருடைய தனிப்பண்பாகும். தாம் பிறர்க்கு எடுத்துரைத்த அற ஒழுக்கங்களைத் தம் வாழ்க்கையிலேயே வாழ்ந்துகாட்டினர் இப்பெரியார். தன்னடக்கம், பெருந்தன்மை, பொறையுடைமை போன்ற சிறப்புக்குணங்களின் உச்சியாக விளங்கினார். ஆனால் இறுதியில் தம் நாட்டு மக்களாலேயே 'கடவுள் இல்லையெனும் கோட்பாட்டால் இளைஞர்களைக் கெடுக்

கிறார்' எனும் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, அதற்குத் தண்டனையாக நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.

உண்மையை மக்கள் ஒருநாளும் அறியமுடியாதென்ற சோபிஸ்தர்களின் கோட்பாடு, அறிவாற்றலுக்குத் தீங்கிழைத்து வீழ்த்துவதாக இருந்தது. ஒழுக்கம், அரசியல் போன்ற துறைகளின் அடிப்படைக் கருத்துக்கள் மாறுபட்டன; அக்கருத்து விளக்கங்களை மக்கள் திரித்துரைத்தனர். இந்நிலையில், மெய்ப்பொருள் அறிவின் இன்றியமையாமையை இப்பெரியார் உணர்ந்தார். எவ்வாறெனின், மேலேசொன்ன அரசியல், ஒழுக்கத் துறைகளில் காணுகின்ற குற்றங் குறைகளும், பிழையான வாதங்களும் மெய்ப்பொருளைப்பற்றி மக்கள் கொண்டிருக்கிற தவறான எண்ணத்தினின்றும் பிறப்பனவாகும் என்பதை அவர் நன்றாக அறிந்தார். மெய்ப்பொருள் காணவிழையும் முயற்சி அறிவின் விளைபயனாகும். ஆகவே, அறிவே எல்லாக் காரியங்கட்கும் ஆயத்தமும், ஆயுதமும் ஆகும் என்பது அவர் கொண்ட முடிபு.

ஆதலால், இருக்கின்ற இடர்ப்பாடுகளைத் தீர்க்கப் பகுத்தறிவாலேயே முடியும் என்றுரைத்த அவர் மனித அறிவாற்றலின்பால் அளவிடற்கரிய நம்பிக்கை கொண்டிருந்தார். தம் முயற்சியின் குறிக்கோளாக அவர் கொண்டது இதுவே. அஃதாவது, மெய்விளக்க முறையை உருவாக்குவது; அறம், உண்மை இவற்றின்பால் மக்கட்கு அன்புபெருகச் செய்வது; மக்கள் நேர்வாழ்வு பெறுதற்பொருட்டு அவர்களை நேர்மைநிறை சிந்தையுடையவர்களாக்குவது போன்றவைகளாகும். இவர் வெறுந் திட்டமிடுபவராகமட்டுமன்றி, வகுத்த விதிகளைச் செயல்வகையில் ஈடேற்றுவதையும் குறிப்பாகக் கொண்டவர். தாம் வகுத்த கொள்கைகளைத் தம் வாழ்வின்முறையிலேயே வாழ்ந்துகாட்டிப் பிறரும் தம்மைப் பின்பற்றும்வகையில் ஒழுகினார்.

நம் மனதில் உள்ள குழம்பிய, தெளிவற்ற, வெறுமை எண்ணங்கள் எண்ணிறந்தன; தீர ஆய்ந்துணராக் கருத்துக்கள் நிரம்ப உள்ளன; நம்பிக்கையின் அடிப்படையில் வைத்துக் கொண்டிருக்கிற தப்பெண்ணங்கள் மிகுதியாக உள்ளன. நாமே சரிவரப் பொருளுணராக் கருத்துக்களாகும் இவை. எனவே, உண்மையை அறியும் வழியாவது, நம்முடைய எண்ணங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்திச் சொற்களின் உண்மைப் பொருள்களைச் சரிவர உணர்ந்து, நாம் கையாளுகிற நோக்கங்களை நன்கு புரிந்து, நாம் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவுறத் தெரிந்துகொள்வதுமாகும் என்று இவர் கருதினார். உண்மையை மக்கள் ஒருநாளும் அறியமுடியாதென்னும்

சோபிஸ்தர்களின் முடிபு தவறானதாகும் என்று சாக்ரடீஸ் கண்டார். மனிதனுக்கு மனிதன் கருத்து வேறுபாடு உண்டு என்பது உண்மையே எனினும், எல்லா மக்களும் ஒருசேர, ஒத்துக்கொள்கிற ஒரு பொதுக்கொள்கையேனும் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடித்தல் நம்முடைய கடமையாகுமெனப் புகன்றார். அந்தவிதமான அனைவரும் ஒப்பும் கருத்துரைகளைக் கண்டுபிடிக்கச் 'சாக்ரடீஸ் முறை' என்று தற்பொழுது அவர் பெயராலேயே வழங்கப்படுகிற ஓர் உரையாடல் முறையைக் கைக்கொண்டார்.

அஃதாவது, ஏதேனும் ஒரு பொருள் குறித்து உரையாடும் பொழுது, அதில் பங்கெடுக்கும் பிறரைவிடத் தமக்குக் கூடுதலாக அப்பொருளைப்பற்றி ஒன்றும் அறியாததுபோல நடித்துப் பிறர் கூறும் கருத்துக்கள் அவர்களுக்கே முன்பின் முரணாகும் வகையில் உரையாடிப் பின்பு அவர்கள் சிறுகச் சிறுகத் தம் கருத்துக்களைச் சார்ந்து ஒப்புக்கொள்ளும்படி செய்வதே அந்தச் 'சாக்ரடீஸ் முறை'யாகும். இத்தகைய உரையாடலின் பயனாக மக்களிடத்துக் காணப்படுகிற தெளிவற்ற, தவறான நோக்கங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவர்களுக்கே நன்கு புலனாகி விடுகிறது.

ஓர் உரையாடலை உதாரணமாகக் கொண்டு இம்முறையை நன்கு உணரலாம்:

இயூதைடிமஸ் என்னும் இளைஞனை, அவன் பெரும் அரசியல் வாதியாகவும், வல்லுநராகவும் ஆவதற்கு எவ்வளவு பேராவல் உடையவனாக யிருக்கிறான் என்பதைக் கூறும்படி சாக்ரடீஸ் கேட்டுக் கொண்டார். அவ்விளைஞன் அவ்வாறே தன்னுடைய விருப்பங்களை வெளியிட்டவுடன், அத்தகைய அரசியல் திறலோனாகுதற்கு அவன் மிக்க நேர்மையுடையவனாக இருத்தலின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இயூதைடிமஸ், ஏற்கனவே, தான் நேர்மையினின்றும் விலகாது ஒழுகுபவன் என்று தன்னைக் கருதியிருந்தான்; எனவே அதை வெளிப்படையாகக் கூறினான். உடனே சாக்ரடீஸ், அங்ஙனமாயின் நேர்மையின்பாற் படுகிற செயல்களையும், தன்மைகளையும், நேர்மையின்மையின் பாற்படுகிற செயல்களையும் தன்மைகளையும் தனித்தனியாகக் கூறுபடுத்திக் கூற முடியுமா? என்று கேட்டார். இளைஞன் முடியுமென்று கூறினான்.

பொய் பேசுந் தன்மை எதன்பாற்படும் என்று சாக்ரடீஸ் வினவினார். நேர்மையின்மையின்பாற்படும் என இயூதைடிமஸ் விடையளித்தான். ஏமாற்றுதல், களவு, அடிமைப்படுத்தல்

ஆகிய ஒவ்வொன்றும் எதன்பாற்படும் என்று மேலும் வினவி னார். நேர்மையின்மையையே இக் குணங்கள் சாரும் என்று இளை ஞன் உறுதியாக விடையளித்தான். ஒரு படைத்தலைவன் தன் பகைவனைத் தாக்கிப், போரில் அடிமைகொண்டு, அவன் பொருள்களைப் பறித்துக் கொள்ளுதலாகிய செயல்கள், எதன் பாற்படும் எனச் சாக்ரடீஸ் வினவினர். இவையெல்லாம் நேர்மை யின்பாற்படும் என இயூதைடிமஸ் கூறினான். இளைஞன் விளக்க வுரைகள் முன் பின் முரணாக இருப்பதைச் சாக்ரடீஸ் சுட்டிக் காட்டினார். சற்று முன்பு, ஏமாற்றல், களவு, அடிமைப்படுத்தல் ஆகியவை யெல்லாம் நேர்மையின்மையின்பாற்படும் என்று சொல்லிவிட்டு, ஒரு படைத்தலைவன் தன் எதிரிக்கு அதே செயல்களைச் செய்யும் பொழுது மட்டும் நேர்மையின்பாற்படும் என்றுரைப்பது பொருந்தாக் கூற்றாகும் என்பதை எடுத் துரைத்தார்.

இளைஞன் சிறிதுயோசனையின் பின்பு, இச் செயல்களை நண் பர்களுக்குச் செய்தால் அவை நேர்மையின்மை, பகைவர்களுக் குச்செய்தால் நேர்மை எனக்கூறினான். அவ்வாறெனினும் முரண் பாடுளது. நோய்வாய்ப்பட்ட குழந்தை, மருந்து குடிக்க மறுக் கிறது. ஆனால், குழந்தையின் தந்தை, மருந்து மிகுந்த சுவை யாக இருக்குமென்று பொய் சொல்லிக் குழந்தையை மருந்தருந் தச் செய்கிறான். ஒருவன் தன் எல்லையற்ற இடர்ப்பாடுகளால் உள்ளம்நொந்து உருக்குலைந்து வாடி வதங்கிக் கையற்று நிற்கும் வேளையில், அவன் தற்கொலை செய்யத் துணிந்துவிடக்கூடாதே என்று ஐயமுற்ற அவனுடைய நண்பன் முன் அவன் எப்பொழு தும் தன்னோடு வைத்துக்கொண்டிருக்கிற கத்தியை அவனறியா மல் அப்புறப்படுத்திவிடுகிறான். இவ்விரண்டு செயல்களும் முறையே பொய் பேசுவதும், களவு செய்வதுமாகும். இச்செயல் கள் எதிரிகளுக்குச் செய்யப்பட்டதல்ல; நண்பர்களுக்குச் செய் யப்பட்டதுதான். ஆனால், இளைஞனுடைய மொழிப்படி நண்பர் களுக்கு இத்தகைய செயல்களைச் செய்தல் நேர்மையின்மை யாகும். எனவே, சாக்ரடீஸ் இம் முரண்பாட்டை நன்கு விளக் கிக்காட்டிவிட்டு, மேற்குறித்த வினைகள் நேர்மையின்பாற்படுமா? நேர்மையின்மையின்பாற்படுமா? என்று மறுபடியும் வினவினார். "சாக்ரடீஸ், நான் கூறிய விடைகளில் எனக்கே நம்பிக்கை யில்லை. நான் இதுவரை கருதிவந்தவைகளுக்கு எதிர்மாறாகத் தற்பொழுது எல்லாம் தோன்றுகின்றன" என்று இயூதைடிமஸ் கூறிவிட்டான்.

ஆகவே, இந்தவிதமாகத் தொகுப்புவழி அளவை (Process of Induction) முறையால் சாக்ரடீஸ் விளக்கவுரைகளைக் கற்

பித்தார். பல செயல்களை, குணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டு ஒரு பொருளைப்பற்றிய ஐயமற்ற தெளிவுற்ற கருத்து விளக்கத்தைத் தொகுப்பதே சாக்ரடீஸ் கையாண்ட தொகுப்பு வழியளவை முறையாகும்.

இதைத் தவிர ஒரு குறிப்பிட்ட வாய் மொழியின் ஆதி ஆதாரங்களைக் கண்டு பிடித்து, அவற்றைப் பகுத்து ஆழ்ந்து ஆய்ந்து முடிவு செய்த விளக்க உரைகளின் உதவியால் நுணுகி ஆராய்ந்து பிழை திருத்திச் சீர்ப்படுத்தும் முறை பகுப்புவழி அளவை (Process of deduction) முறையாகும்.

எனவே, நாம் கூறுகிற சொற்களின் பொருள்களை நன் குணர்ந்து, இவ்வகைப் புதிய முறைகளைக் கையாளுவதின் வாயி லாய், அவற்றின் ஆதி ஆதாரங்களைக் கண்டுபிடித்தல் இயலுவதே என்று சாக்ரடீஸ் கண்டார். சுருங்கக்கூறின், அறிவைப்பெறு தல் முடியாதெனும் சோபிஸ்தர்களின் கூற்று, தவறுனது, மெய்யறிவு பெறுவது, இயலுங்காரியமே என்று, நிலைநாட்டின பெருமை அவரையே சேரும்.

(தொடரும்)

---

## உலகத்து இயற்கை

[நெல்லை, திரு. க. சுப்பிரமணியன், சென்னிமலை.]

(அறுசீர் விருத்தம்)

திரண்டபெருஞ் செல்வத்தைத் தேடுதற்கும்
செழிப்போடு வாழ்வ தற்கும்
இரவுபகல் உழைக்கின்றார், ஒருசாரார் ;
இன்னுமொரு சாரார் தங்கள்
கரவில்லாக் குறிக்கோளைக் கனவினுள்ளும்
கருதிக்கொண் டுருற்று கின்றார் ;
இரண்டுபட்ட இயற்கையினல் இவ்வுலகம்
இயன்றுவரும் நிலைமை காண்மின்.

# தமிழர் மணம்

[தென்னாப்பிரிகா—டர்பன், திரு. ச. மு. பிள்ளை]

பிறர் பிறரெல்லாம் பலவிதநிலையில் நின்ற அந்தப் பண்டைக் காலத்தே, நாகரிகத்தில் கீர்த்திபெற்று விளங்கியவர் திராவிடரே. இவ்வுண்மையைப் பண்டைத் தமிழ்நூல்களில் பரக்கக் காணலாம். இம்மாட்சிமைப்பட்ட திராவிடர்களிடத்து இருந்த உயரிய பழக்க, வழக்க, வொழுக்க நிலைகள் நாளடைவில் முற்றிலும் மாறுபட்டுவிட்டன.

தம் விழுமிய வொழுக்கங்களை இழந்து, தாய்நாட்டிற் குடிபுக்க சிலர், சுயநலங்கருதிப் புனைந்திட்ட உரைகளை மெய்யெனக் கொண்டு, அவரது ஒழுக்கங்களே தம்முடைய ஒழுக்கங்களெனக்கருதி மயங்கவும் நேர்ந்தன. மணம், தமிழ்நூல் வழக்கால் எவ்வாறு நிறுத்தப்படுகின்றதென்றால் களவு, கற்பு என்னும் இரண்டு வழிகளாலென்க. களவல்லது கற்பு நிகழாது; நிகழினும் அக்கற்பு நிலையுறுதல் அத்துணை இயலாதென்பது தேற்றம். களவென்ற சொற் கேட்டவுடன், களவு தீதென்றல் தவறு. அது நல்லதாக மாறுதலும் உண்டு. தலைவனோடிய தலைவி, அவனை அறியாது தன்னைக் கொலைசெய்வான் றுணிந்து, ஒரு கலத்தில் நஞ்சுபெய்து மறைவிற் சேமித்து வைத்தனள். அதனை யறிந்தான் ஒருவன். அவளை அறியாது அக் கலத்தினை எடுத்து நஞ்சினை உகுத்தனன் என்க. இது களவாமோ? மற்றும் சிறுமியரை ஈன்ற ஞான்றே இருமுதுகுரவர் இது பிறர் பொருள் என்று வரைசெய்திட்டமையின், பிறர்க்குரிய அவரை வவ்வுதல் வழக்கேயாமன்றோ?

கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, ஒத்த கல்வியும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும், ஒத்த வனப்புமுடைய ஒருவனும் ஒருத்தியும் தம்மிற்றாமே எதிர்ப்பட்டபொழுது இருவருள்ளத்திலும் ஒருங்கே தோன்றிய உருவவன்பு விழிவழிப் பாய்ந்து இருவரையும் ஒன்றுபிணிக்கக் கூடுவது களவாமென்க. அஃதன்றி, அன்பு எவ்வாறு நிகழும்; அன்பில்வழிக் கற்பு எவ்வாறு நிலையுறும்? பின்னர் யாவருமறியச் சடங்குவழி மணத்தல் கற்பாம். இரு முதுகுரவர் கற்பித்த வழி இருவரும், மணமகன் கற்பித்தவழி மணமகளும் நிற்றலாற் கற்பு என்றபெயர்த்தாயிற்று.

"கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" என்னும் பெரியோர் வாக்கும் இதனை வலியுறுத்தும். இவ்வித மணமே தமிழ்-

மக்கட்குப் பழைமையும் உரிமையுமாம். ஆனால் இப்பொழுது நடைபெறும் மணவினை அறிவுடையார் வெறுக்கத்தக்க நிலையின தாம். ஒத்த கல்வி, ஒத்த அறிவு, ஒத்த உடல்நிலை, ஒத்த வனப்பு என்னுமிவற்றை ஒருசிறிதும் கருதுவாரல்லர். மண மகன் எவ்வளவு இழிந்தவனேனும், வயதில் முதிர்ந்தோனேனும், நோய்க் கிருப்பிடமுள்ளோனேனும் பொருள் ஒன்றுமட்டும் உடையவனாயின் அவனை விழுமிய மணமகனாகக்கொள்வது மிக்க வழக்காயிற்று.

மணமகள், கல்வியறிவற்றவளேனும், அழகிற் குறைந்தவ ளேனும், எவ்வாறிருப்பினும் அம்மகட்கு எத்துணைப் பொருள் ஈவர் என்னுமிவற்றை யறிந்து இவ்வளவிலே பெரிதும் மகிழ்ந்து கொள்வாராகின்றனர். இம்மட்டோ! ஒன்றுமறியா இளம்பருவத்தே மணச்சடங்கு நிகழ்த்துகின்றனர். சுருங்கச் சொல்லின் இப்பொழுது மணம் என்பது ஒரு வணிகமாக மாறி விட்டது.

முன்னர்க் குறித்திட்ட இருவர் மனம் ஒப்பிய உண்மை அன்பே, மணமக்கள் புனையும் மங்கல அணியாம். அவ்விரு வரும் மலரும் மணமும், மணியும் ஒளியும், நகமும் சதையும் போல ஒன்றுபட்ட அன்பினராய் ஒருவர்க்கொருவர் துணைபுரி பவராய், உரிமையாளராய், கிழவன் கிழத்தியாய் வாழ்தற்குக் கடப்படுகின்றனர் என்பதை மணச்சடங்கிற் கூறப்படும் மறை மொழியாகிய மந்திரங்களும், கிரியா விதானங்களும் செவ்விதிற் கற்பிக்கின்றன.

இல்லறமாகிய சகடு, ஒத்த அறிவும், ஒத்த வன்மையு முடைய இவ்விருவரா லிழுக்கப்பட்டாலன்றி ஓடாது. ஒருவர் சற்று வலிகுன்றியவராயின் அச்சகடம் எங்ஙனம் சரிவர ஓடும்? அவ்விருவர் தலையிலும் இவ்வறச்சுமை சமன்செய்து பங்கிடப் பட்டதென்க. ஒரு கூறு மிக்கதும், ஒரு கூறு குறைந்ததும் மில்லை. இவ்வாறாக மணமகனுக்கு மணமக ளடிமையாதலும், மணமகளுக்கு மணமகன் அடிமையாதலும் இயலுமோ? இவ் வியன்முறை திருத்தம் பெற்றாலன்றி நம் சந்ததியார், நம் மூதாதையார் உயர்நிலையை ஏறிட்டுப் பாரார். இத்தகைய திருத்தத்திற்குப் பெண்பாலாரைக் கல்வியறிவிற் சிறந்தவராக் குதல் நமது முதற் கடமையாகும்.

ஒரு குழுவினர் திருத்தம் யாவும் அவரது பெண்பாலா ரிடத்தில் அடங்கிநிற்கும். அவர் திருத்தம் பெறின் நாம் திருந்துவோமென்பதிற் சிறிதும் ஐயமின்று. நாகரிகத்தில் நாம் மிக முன்வந்துள்ளோம் என்று கருதுகின்ற நம்மவர், இம்

மணவினையிலே நன்காராயக் கடமைப்பட்டுள்ளார். இனி, இச் சடங்கில் ஏராளமான பொருளை வறிதே செலவிட்டு இடர்ப்படு கின்றனர் என்பது வெள்ளிடைமலை. அப்பொருள் யாவும் ஆடம்பர நெறியிலேயே செல்லுகின்றன.

ஒரு சடங்கைச் செய்யத் தொடங்குபவன் அது யாரால் சொல்லப்பட்டது? எந்த நூலிற் சொல்லப்பட்டது? அது எவ்வாறு செய்யப்படவேண்டும்? யாரால் செய்யப்படவேண்டும்? செய்தால் வரும் பயன் யாது? செய்யாமையால் வரும் இழுக் கென்ன? என்பனவற்றை அறிந்து அல்லது அறிந்தார்வாய்க் கேட்டன்றோ செய்தல்வேண்டும்? தமிழ் மணமுறை பண்டைக் காலத்தில் மிக உயர்ந்து விளங்கிற்றென்பதும், இடையில் அவ் வழக்கு மாழ்கி அயல் வழக்கு விரவிற்றென்பதும், இனிப் பண்டைநிலைக்குக் கொண்டுவருதற்கண் நாம் கல்வியறிவுடைய ராதல் வேண்டுமென்பதும், அதனுள்ளும் பெண்பாலாரை அவ்வழி உயர்த்துதல் இன்றியமையாக் கடப்பாடாகுமென் பதும், அக்கடமையை முற்றுவித்தாலன்றி நம் மூதாதையர் பெருமைக்கு நாம் தீங்கிழைத்தவராவோம் என்பதும் போதரும்.

---

கவிமணி, தேசிக விநாயகம்பிள்ளையவர்கள் பிரிவு பற்றிய

## இரங்கற்பா

[திரு. எ. வே. திருப்பதி]

(பஃறொடை வெண்பா)

கவிமணியே கன்னித் தமிழ்த்தா யளித்த
தவமணியே; இன்கவிதை கண்ட—நவமணியே!
காற்றொடு சேர்ந்தனையோ? காலனார் ஏகினையோ?
ஆற்றுவ தெங்கனம்? யானின்று நின்பெருமை
போற்றிப் புகழ்வதல் லால்!

---

# சேக்கிழார் திருமொழி உண்மை[1]

*உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்*

என்னும் இத் திருமொழிச் சிறப்பை உரைப்பது சிவபெருமானுடைய திருவருள் இருந்தன்றி அமையாது. 'உலகெலாம்' என்று கூத்தப் பெருமான் முதல் எடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் அடிகள் பாடியருளியதாகையால், "திருத் தொண்டர் புராணம்" என்னும் பெரிய புராணத்தின் முதற் செய்யுளாகிய இதன் பெருமையே பெருமை. இந்தப் பாடலில் கடவுள் மொழி ஒரு பாகமும், சேக்கிழார் மொழி மற்றைப் பாகமுமாகக் கலந்திருக்கின்றன என்பதன் கருத்தை உய்த்துணருங்கால், எல்லாம் கடவுள்மொழி என்பதே உண்மையாக முடியும். எங்ஙனம் எனின்? கடவுள் மொழியுடன் கடவுள் அல்லாதவராகிய சேக்கிழார் மொழி விரவியது எனின், கடவுளை மலம் இலராகக்கொள்ளுந் தன்மையால் ஒன்றில் ஒன்று சேர்தல் பொருந்தாது. சேக்கிழார் மொழியும் கடவுள் மொழியைப் போல மலமில்லதாகலின், ஒன்றில் ஒன்று சேரும் எனின், அப்போது சேக்கிழாரும் கடவுளேயாகக் கொள்ளப்படும். "இரண்டு கடவுளர்க்கு இடம் செய்ததாய் முடியும். சேக்கிழார் மொழியே மலமில்லாதபோது அதற்குக் கடவுள் முதல் எடுத்துக் கொடுப்பது ஏன்? என்னும் ஐயமும் நிகழும். கடவுள் மொழியும் சேக்கிழார் மொழியும் ஒன்றிலொன்று ஏற்றத் தாழ்வுபடவே கலந்திருக்கின்றன எனின், ஒப்பற்ற மொழியுடன் தமது மொழியைக் கடவுள் கலப்பார் என்பது ஒவ்வாது. வேத முதல்வன் (புருடன்) சிவபெருமானை நோக்கித் தேவரீரை, மற்றைத் தெய்வங்களோடு ஒப்பாக வரித்துப் பழிமொழிப் போற்றலால் சினம்வரச்செய்ய மாட்டோம் என்று சொல்லியிருப்பதால், அவர் தம்மில் தாழ்ந்தவர் குழுவிற் சேர்ந்து மதிப்படையாதது போல, அவர் மொழியும் தாழ்ந்த மொழியிற் கலந்து நில்லாது என்க. அவரை வரித்துப் பூசிக்கின்ற காலையில் அவருடன் இருத்தி வேறு தேவர்களையும் வரித்து அவர் திரு முன்னர்ப் பூசிக்கின், அவர்க்குச் சினம்

---

1. பல்லாண்டுகட்கு முன் இறையடிப் பேறுற்ற, **சைவ சித்தாந்த சண்ட மாருதம் திரு சோமசுந்தர நாயகர் அவர்கள் சித்தாந்த ரத்நாகரத்**தில் எழுதியது. திருவாளர், பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் திரட்டி உதவியது.

உண்டாம் எனவும், பிறரைப் பூசிக்கின்ற காலையில் அவருடன் இருத்திச் சிவபெருமானையும் பூசித்தல் சிவபெருமானுக்கு மகிழ்ச்சியை உண்டாக்காமல் சினத்தையே உண்டாக்கலால் அந்தப் பூசை சிவபூசை என்பதில் தவிர்ந்து சிறு தெய்வ பூசை என்று சொல்லப்படும் எனவும், மேற்காட்டிய மறை முதல்வன் கருத்தால் விளங்குகையால், ஒன்றுக்கொன்று வேற்றுமையுற்ற பொதுமொழி ஒன்றுடன் பரமபதியாகிய அவரே தமது மொழியைக் கவனிப்பார் என்பது எங்ஙனம் பொருந்தும்?

பிறர் செய்தலால் சினம் உண்டாமன்றித் தாமே செய்தால் குற்றம் இல்லையெனின், அப்போது கடவுள் தன்மைக்கே இழுக்கு வரும். அப்படித் தாமே செய்ய வேண்டிய இன்றியமையாக் காரணம்தான் காட்ட நேரும். மேல் மறைமேற்கோளால் பிறர் சிற்றறிவினராகவும் அவர் செய்யவே உடன்படாராகிய அக் கடவுள் தாமே தங் கொள்கையை மறுப்பார் என்று எப்படி அமையும்? சேக்கிழார் மொழியுடன் கடவுள் மொழி கலந்தது என்பது ஐயம் எனில், அதைக்காட்டிலும் கடவுளையே ஐயுறுவது மிக்க சிறப்பாம். இன்னும் இதனை ஆராய்வது இன்றியமையாதது அன்று என்று விடுவதே பெருநலமாம். சைவம் என்னும் சித்தாந்தத்திற் கட்டுண்ட பக்குவமுடையார்க்கே இந்த ஆராய்ச்சி யாகையால், அவன் இன்ன ஹேயாவலம்பனத்தின் இகழ்தல் செய்யான். அவனுக்கு அச் சமயத்தாற் பெறப்படும் யாவும் உண்மையெனக் கொள்ளுந் துணிவு உடைமையால் அத் துணிவு பற்றி ஆராய்தல் ஒன்றே உரிய கடமையாம். அதனால் இனிப் புறச்சமயிகள் கூற்றை விரியாது விடுப்பாம்.

புறச் சமயிகளுக்கும் ஒப்ப நெறி முறை சொல்லவேண்டு வதுதானே யெனின், புறச் சமயிகள் அநேகருள், கடவுளே இல்லை என்பவனுக்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் என்ன பலன்? முதல் கடவுள் இருப்பை அவனுக்கு விளங்கக் காட்டியன்றோ பின்னர் மற்றைய பொருள்களை உணர்த்தல் வேண்டும், அதற்குப் புண்ணியம் இருந்தன்றோ அவனுக்குக் கைகூடல் வேண்டும். நமது மொழி அவனிடம் பயன்படாது என்க. அவன் நாமாகிற வரையில் அவன் நம் தன்மை அடைவானோ எனின், நாயும் பேயுமே நாளைக்கு நம் தன்மையை அடைவது முடிவாக, எவ்வளவோ படி கடந்து வந்தவனாகிய அவன் வர மாட்டான் என்பது எங்ஙனம்?

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப்பேயாய்க் கணங் களாய், வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅ

நின்றஇத் தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான், மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்னும் அருளாளர் திருமொழிப்படி கண்டு கொள்க. அன்றியும்,

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும் புகல் மிருதி வழியுழன்றும் புகலும்ஆச் சிரமம், அறத்துறைகள் அவைஅடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும் அருங் கலைகள் பல தெரிந்தும் ஆரண நூல் படித்தும், சிறப்புடைய புராணங் கள் உணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென் றால் சைவத் திறத்தடைவர். இதிற் சரியை கிரியா யோகம் செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்னும் மேற்கோளாற் காண்க.

இந்த அருள் மொழிகளால் இன்றுள்ள நாய்களும் பேய் களும் நாளைக்கு ஞானிகள் ஆவரென்பதும், அப்படியே புறச் சமயிகளும் பாகம் வரப்பெற்றுச் செயல் செய்பவராவர் என்ப தும் வெளிப்பட்டது. அப்படியானால் நாளைக்கு ஞானியராவது நினைவாய் இருந்தும், அந்த ஞானத்தை இப்போது அப்படியா கப் போகிற நாய்களுக்கும் பேய்களுக்கும் கைகூடச் செய்வது அரியதும், செய்ய முயல்வது அறியாமை உடையதுமாய் முடி யுமோ அங்ஙனமே புறச் சமயிகளிடமும் கொள்ளத் தக்கதாம். புறச் சமயிகள் ஒரு நலனும் இதனால் எய்திக் குணப்பட இடம் உண்டாகாதபோது, அவர்களைக் குறித்துச் சிவ தத்துவங்களை நம் ஆசாரியர்கள் மிகுதியாய் விரிவுரை செய்திருப்பது என்னை யெனின்? அதன் உண்மையை விளக்குவாம். சிவப்பெரு நாட்டுப் பெருஞ் செல்வத்தை அடைதற்குரிய நம்மவர்கள், அப்புறச்சமயி கள் தீய உரைகளால் கலங்காவண்ணமும் அப் புறச் சமயிகள் மறைவின்றி வெளிப்படும் சமயத்திற் புகுந்து சைவத்தைச் சார்ந்திருக்கும் புண்ணியம் கூடாவிட்டாலும், அப்படிக் கூடுதற் கான ஏதுவாக அவர் நெஞ்சிலாவது, உண்மை தைக்கும். ஆகை யால் அப்படித் தைக்குந் தோறும் உண்மை இப்படி இருக்கிற தல்லவா? நாம் பயனில் காரணத்தால் கலகம் இட்டுத் திரிந் தோமே. இப்போது இதை விட்டுவிட்டு அதில் நுழைவதென்றால் மானம் வாட்டுகிறதே! வீணுகக் கைகூடாத தன்மையால் அத னாற் கைகூடற்பாலதான பரிபாகத்தை அவர்க்கு ஊட்டும் பொருட்டும் நம் பெருமக்கள் செய்கை பெருமை பெற்று நிலைக் கும்! நிலைக்கும்!!

(தொடரும்)

# காதற் கவர்ச்சி

[நெல்லை. திரு. க. சுப்பிரமணியன்]

இளந்தமிழ் மாணவர்காள்! செந்தமிழ்ச் செய்யுளிலக்கியக் கடலுள் மூழ்கி ஒரு முத்தெடுத்து, அதன் ஒளி கண்டு களி கூர்வம், வம்மின்!

எழுமையும் தொடரும் விழுமிய அன்புள்ளம் வாய்ந்த தலைவன் பிரிந்து சென்றான். பிரிந்த பின், பெருந்துயர் எய்திய பெண்ணணங்கு, நெஞ்சுற்ற ஆற்றாமையை, அடக்கும் வலியிலளாய்த் தோழியின்பால் மொழிகின்றாள். எக்காலமும் மாறுதல் இல்லாத மாண்புடைக் காதலர், தம் மலை நாட்டை மறந்து பிரிந்து போய் விட்டார். கவலையால் வெளிப்படுங் கண்ணீர், ஆறுபோல வந்துகொண்டே இருக்கின்றது. மெல்லிய தோள்வளையும் புல்லியிராமல், கழன்று விழும் நிலையை எய்துகின்றது. உள்ளந் தாங்காத காதற் கவர்ச்சியால், உடலும் வருந்துகின்றது. மருந்து பிறிதில்லாப் பெருந் துயரால் மாளநேரிடும் எனவுணர்ந்த மனையோள், வாழ வழி கூறுதியெனத், தோழியை வினவுகின்றாள்.

மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி! யான் வாழும் ஆறே.

'மறப்பருங் காதல்' என்றும், 'அமைப்பருங் காதல்' என்றும், காதலன்புக்கு அடைமொழி கொடுத்தோதுவர், பாலை பாடிய பெருங் கடுங்கோவும், பெருங்கதை பாடிய கொங்கு வேளிரும். நேர்ந்த வழிப் புணர்ந்து, தீர்ந்தவழி மறக்குந் திறத்ததும், முன் மலர்ந்து பின் கூம்பும் இயல்பினதும் பண்டைத் தமிழர் கொண்ட காதலன்று. ஆதலான், ஏற்ற அடையான், 'மாறாக் காதலர்' என மன மகிழ்ந்து கிளத்துகின்றாள், மங்கை. தன்னை மறக்கவில்லை; தான் வாழும் மலை நாட்டில், முன் ஓர் நாள், மல்லிகை மணங் கமழ, வண்டுந் தேனும் யாழ் முரல, மலர்ச் சோலையில் மார்புறத் தழுவி மகிழ்ந்திருந்த இடத்தை மறந்துவிட்டார் தலைவர் என, அறிவுடம்பட்ட அரிய கருத்தை இயம்புகின்றாள், அரிவை. அங்ஙனம் பிரிந்து சென்றதும், பிற்றைஞான்று இன்புறற்கும் அறம்புரிதற்கும் வேண்டிய பொருளீட்டவே என எண்ணினள், ஏந்திழையாள். ஆகலான், மனம் நொந்து காதலனை ஏசாமல், தான் தனித்திருக்கலாற்றாத உளக் கவலையையே உள்ளுறுத்து உரைக்கின்றாள்.

காதல் கைம்மிக்கது : கவற்சி பெரிதாயிற்று என்பதை ஆறுபோலப் பெருகிவரும் கண்ணீர் காட்டுகின்றது. அது மட்டுமா? அந்தக் கண்ணீர் வெந்த உள்ளத்தினின்றும் வெளிப் படுவது. ஆதலால், வெப்பம் மாறாத இயல்பினதா யிருக்கிறது என, நுவன்று காட்டினாள். கண்ணீர் இப்பொழுதும் நிற்க வில்லை, இன்னும் துளித்துக்கொண்டு, கீழ் வீழ்ந்துகொண்டு இருக்கின்றது. உடல் மெலிந்தது; கைகால் மெலிந்தன; கைவளை கழல்கின்றது; உயிர் வாழ்வது எவ்வளவு காலம் என்று எவர் சொல்ல முடியும்? தோழியைக் கேட்கின்றாள், வாழும் வழி கூறுக வென்று, காதற் கவற்சி மிக்க தலைவி.

நாலு வரிகளிலமைந்த அழகிய இக் காதற்காட்சியை, யாப்பருங்கல விருத்தியில், மேற்கோளாகக் காட்டப்பட்ட பாட்டொன்று நமக்குத் தருவதாகும்.

---

கவிமணி, திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் மறைவு பற்றிய

## கையறுநிலை

[வித்துவான், திரு. தி. மு. சங்கரலிங்கம்]

### வெண்பா

கவிமணிகள் பற்பலவும் காசினிக்கே தந்து
புவிமணியாய் வாழ்ந்த புனிதா!—கவிமணிப்பேர்
கொண்டோய்! இனியகவி கூறும் உனைக்காண்ப(து)
உண்டோ? உரையாய்! உவந்து! 1

ஆற்றுப் பெருக்கினைப்போல் அன்பார் தமிழ்நயத்தை
ஊற்றிஉல குக்களிக்கும் உத்தமனே!—நாற்றிசையும்
இன்பப் புகழொளியை ஏற்றமுறும் நல்லவனே!
துன்பமுறச் சென்றாய் துணிந்து. 2

புத்தர் கருணையுளம் பூவுலகோர் கண்டுவக்க
நித்தம் எடுத்துரைக்கும் நேயமுளாய்!—சித்தமகிழ்
நற்றமிழ்ச்சீர் கூறுமெழில் நாவலவ காண்பதுண்டோ?
கற்றவர்போற் றுன்னுருவைக் காண். 3

தேசிகவி நாயகப்பேர் சேரும் பெயருடையாய்!
மூசில் கவிமணியாய் முன்னஅவிர்—காசினியில்
பற்பலரும் போற்றுமெழிற் பாங்குடையாய்! நின்னுடைய
நற்பொருள்சொற் கேட்பதெந்த நாள்? 4

---

# பிரெஞ்சுஇந்தியா, அன்றுமுதல் இன்றுவரை

1674—பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி சார்பில் புதுவையில் பாக்டரி யொன்றை பிரான்ஸிஸ் மார்டின் நிறுவினார்.

1693—புதுவையை டச்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டனர்.

1699—ரிஸ்விக் சமாதான உடன்பாட்டின்படி பிரெஞ்சுக்காரருக்குப் புதுவை திரும்பக் கிடைத்தது

17 1—படகாரா ராஜாவிடமிருந்து மாஹியை பிரெஞ்சுக்காரர்கள் பெற்றனர்.

1731—ஏனுமிலும் பிரெஞ்சுக்காரர் ஊன்றினர்.

1761—ஐர்கூட் தலைமையில் ஆங்கிலேயர் புதுவையைப் பிடித்தனர்.

1765—இங்கிலாந்து புதுவையைத் திரும்பவும் பிரான்சுக்கு அளித்தது.

1778—மீண்டும் புதுவையைக் கைப்பற்றினர் ஆங்கில தளபதி மன்ரோ.

1785—வெர்ஸேல்ஸ் ஒப்பந்தப்படி மீண்டும் பிரான்சுக்குப் புதுவை கிடைத்தது.

1793—மற்றொரு முறையும் பிரிட்டிஷார் வசமாகியது.

1816—பாரிஸ் உடன்பாட்டின் மூலம் திரும்பவும் பிரான்ஸ் புதுவையை பெற்றது.

1941—இந்திய சர்க்காருக்கும் பிரெஞ்சிந்திய சர்க்காருக்குமிடையே சுங்க ஒப்பந்தம் முடிபு.

1947—பிரெஞ்சிந்திய பிரதிநிதி சபை தோன்றல் - ஆகஸ்டில் இந்தியா விடுதலை பெற்றதை யடுத்து பிரெஞ்சிந்தியாவிலும் மகிழ்ச்சிக் கிளர்ச்சி - கவர்னர் பரோன் சந்திப்பையடுத்து, அமைதியாயிருக்கப் பிரெஞ்சிந்திய மக்களுக்குக் காந்தியடிகள் வேண்டுகோள்.

1948—இந்தியாவில் தங்கள் அரசியல் மேன்மையை நிர்ணயித்துக் கொள்ளப் பிரெஞ்சிந்திய மக்களுக்கு உரிமையளிக்கும் இந்திய - பிரெஞ்சு உடன்பாடு - முனிசிபல் தேர்தலில் பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு கட்சிக்கு மிக்க வெற்றி-மாஹியில் எழுச்சி, பிரெஞ்சுப்பட்டாளம் வருகை. தாயகத்துடன் இணைக்க வற்புறுத்தி ஜெய்பூர் காங்கிரஸ் தீர்மானம்.

1949—வாக்கெடுப்புக்கு நகரசபைகள் மூலம் தேதி நிர்ணயம் - சுங்க ஒப்பந்தம் காலமாதல் - இந்தியாவுடன் போக்குவரத்து பர்மிட் முறை - இந்தியாவுடன் இணையச் சந்திரநாகூர் முடிவு - வாக்கெடுப்பின்றியே திட்டுகளை இணைக்க நகரசபைகள் வற்புறுத்தல்.

1951—சந்திரநாகூர் மாற்றத்துக்கு இந்திய - பிரெஞ்சு உடன்பாடு முடிபு. மக்கள் கருத்தறிவதில் மிகுந்த அல்லல்களைக் கண்டனர் நடுநிலைப் பார்வையாளர்.

1952—வாக்கெடுப்பு விவகாரம் இனிக்கிடையாது என்று சென்னைக் கூட்டத்தில் நேரு அறிவுறுத்தல்.

1954—மார்ச். பிரெஞ்சிந்திய நிர்வாக சபை உறுப்பினர் மூவர் நெட்டப்பாக்கம், மதுக்கரையை விடுவித்தனர்.

மே—பிரெஞ்சிந்திய விடுதலை அரசியல் நிறுவல் - மாஹி விடுதலை.

ஜூன்—பாரிஸில் இந்திய - பிரெஞ்சு பேச்சு முறிவு - ஏனாம் விடுதலை.

அக்டோபர்—இணைப்புக் குறித்து இந்திய - பிரெஞ்சுக் கூட்டு அறிக்கை (13-ஆம் நாள்) - இந்தியாவுடன் இணைய நகரசபை பிரதிநிதி சபை உறுப்பினர்கள் முடிவு (18-ஆம் நாள்) **தில்லியில் இந்திய - பிரேஞ்சு ஒப்பந்தம் கையெழுத்தாகியது (21-ஆம் நாள்) பிரேஞ்சு இந்தியா, இந்தியக்குடியரசோடு ஒன்றாக இணைந்தது (நவம்பர் 1-ஆம் நாள்).**

---

# செய்திகளும், குறிப்புக்களும்

## (க) இந்திய அமைச்சர் நேரு சீனநாட்டுச் செலவு :

குடியரசுத் தலைவர் திரு. சூ. என். லாயின் அழைப்புக்கிணங்க, நம் இந்திய நாட்டு அமைச்சர், திரு. பண்டித சவகர்லால் நேரு, 15-10-'54-ஆம் நாள் காலை 7-32 மணிக்குத் தில்லி, பாலம் வானூர்தி நிலையத்திலிருந்து சனுபதிக்குரியதான 'டகோடா' வானூர்தியில் கல்கத்தா வழியாகப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் அவர் புதல்வி திருவாட்டி இந்திராகாந்தியும், வெளிநாட்டுப்பகுதி அமைச்சர் அலுவலகச் செயலாளர், திரு. என். ஆர். பிள்ளையும் சென்றனர்.

18-10-54 ஆம் நாள் காலையில் சீன நகராகிய கேண்டான் போய்ச் சேர்ந்தனர். அங்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி, திரு. நேருவை மிக்க அன்புடன் வரவேற்றனர். பவழநதியில் ஒரு படகில் ஏறிச் சென்றார்; அதுகாலை, சிற்றுண்டி அருந்தினர்; அப்பால் ஹாங்கோ, ஹனோய் முதலிய நகரங்கட்குச் சென்றுவிட்டுப் பின் பீகிங் நகருக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்குச் சீனநாட்டுக் குடியரசுத் தலைவர் மோ-சே-டுங்கைச் சந்தித்து ஒன்றரை மணி நேரம் வரை உரையாடினர். அங்கு நேருக்கு மக்களால் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது. சீனத்தலைநகரில் பெருங் கூட்டத்தில் நேரு, இந்திமொழியில் பேசினர். இவ்வாறு பல இடங்கட்குச் சென்றும், ஆங்காங்கே சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தம் சுற்றுச் செல்கையை முடித்துக்கொண்டு 2-11-54-ஆம் நாள் பிற்பகல் 3-10 மணிக்கு நம் இந்தியநாட்டுக்கு வானூர்தியில் வந்து சேர்ந்தார்.

**குறிப்பு :** நேரு, சிறந்த அறிஞர் ; பண்பாடுகள் பலவும் ஒருங்கே அமைந்தவர் ; அவர் தம் நோக்கம், காந்தியடிகளின் அறவழியைப் பின்பற்றியது, அதனுல் அவர் புகழ் எல்லா நாட்டிலும் மண்டிக்கிடக்கின்றது. அவர்தம் புகழ் ஓங்குக ; அவர் கொள்கைகள் வெல்க; இந்திய, சீன உறவு ஓங்குக ! **ஆ - ர்.**

# மதிப்புரை

['ஸ்ரீ குணரத்நகோசம்' ஸுவர்ண குஞ்சிகா என்ற விரிவுரையுடன் கூடியது. பக்கம் 344; விலை ரூ. 2—8—0 ஆசிரியர் திருமலை நல்லான் அவர்கள். கிடைக்குமிடம்: நம் கழகத்திலும், 29 பெருமாள் முதலித்தெரு, சௌகார் பேட்டை, சென்னை - 1. இலுமாம்.]

இந்நூல் திரு. பராசரபட்டர் அருளியது. இதற்குப் பொற்றிறவுகோல்-சுவர்ண குஞ்சிகா என்னும் விரிவுரை இது. திருமலை நல்லான் என்னும் செஞ்சொற் புலவரால் யாக்கப்பெற்றது. நூல் அறுபத்தொரு வடமொழிச் சுலோகங்களைக் கொண்டதாகத்தெரிகிறது. நூல் நுதலும் பொருள் பிராட்டியின் பெருமையாகும். நூலாசிரியர், பிராட்டி இறைவினினும் சிறந்தவர் என இசைக்கின்றனர். அதற்குரிய அரிய பெரிய காரணங்களையும் அமைவுற அறைகின்றனர்.

இந்நூல் உரை எளிமையும் இனிமையும், திட்பநுட்பமும் செறிந்தது. தக்க தமிழ்நடை வாய்ந்தது. விளக்கமிக்கது. உரையை மட்டும் கற்பினும் அஃதோர் உரைமணித் தனிநூல் போன்று விளங்கும் சால்பமைந்தது. உரையாசிரியர் பாவன்மை, நாவன்மை, பன்மொழிப்புலமை, பண்புடைமை வாய்ந்த மிக்காராவர். செந்நெறி பேணும் சீரியர். புலமையாற்றல், நூலுரை காணும் நிலைமையால் விளங்குவதொன்று. அத்தகைய ஆற்றலை இவ்வுரையாசிரியர் இயல்பாகவே பெற்றுள்ளனர். இப்பெருந்தகையார் தம் இளமைப்பருவத்தே தென்தமிழ் நன்மையும், வடமொழி மேன்மையும், பாவன்மையும் பயனுறக்கொண்டவர்.

நூலாசிரியர் கருத்தறிந்து உரை வகுப்பது ஓர் அருமையாகும். அதன் மேலும் அயன்மொழிக்கண் உரை வகுப்பது மிகவும் அருமையாம்; அவ்வுரைக் கருத்தமையப் பாட்டமைப்பது அருமையினும் அருமை என்பது யாவர்க்கும் ஒத்ததொன்றே. பாட்டும் யாப்பழகோடு பொருட்செறிவும் உள்ளது. அப்பாக்கள் கற்பார் உள்ளத்தைக் கனிவிக்கும் காட்சிய. அவையே தனி நூலாகச் சிறக்கும் தன்மைய. பாட்டுக்களும் அறுபத்தொன்றாகும்; அவற்றுள் ஒன்று:

"அன்னுய்சீர் மைதிலியே அரக்கியர்கள் அன்றைக்கும் பைங்குற்றம்
புரியா நிற்ப
அன்னுரை அளித்தநுமன் அழியாவண்ணம் அழித்தனையால்
இராமனது குழுவின் மேன்மை
தந்நாவிற் சரணமெனத் தகுதிவாய்ந்த தசமுகனின் தம்பியொடு
காகங் காத்த
தென்னுவது ? இருங்குற்ற மிழைக்கின்றேமுக் கின்பமுன
தியல்பான பொறுமை நல்க."

இந்நூலைப் பொதுவாகச் செந்தமிழ் அன்பர்களும் சிறப்பாகத் திருமால் நெறியினரும் வாங்கியும் வாங்குவித்தும் பொருளுணரக்கற்று அருளும் இன்பும் எய்துவார்களாக. அதன் வழியாக ஆசிரியரவர்களை இதுபோன்ற அரும்பெருந்தொண்டுகளில் மக்கள் ஊக்குவார்களாக.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி

தோற்றம்:
9—9—1899

மறைவு:
5—12—1954




தருமபுர ஆதீனத்தார் அளித்த பொன்னாடையை
**முதலமைச்சர் திரு. காமராசர்**
திரு. நெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்குப் போர்த்துதல்



திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்கு
திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பரிசு வழங்குதல்

பன்மொழிப் புலவர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்